மாநகர சபை, யாழ்ப்பாணம்

பக்கங்கள் : பன்னிரண்டு + II

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 24 வெள்ளிக்கிழமை (08.08.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 254

# வன்னியில் தமிழர்கள் அகதிகளாக அவதியுற மடுவுக்கு சிங்களவரைக் கூட்டிச்செல்ல அக்கறை



## ஜனநாயக நாட்டில் ஏன் இந்தப் பாரபட்சம் என்று குமுறுகிறார் ஜயலத்

கொழும்பு, ஓகஸ்ட் 08

யுத்தத்தினால் இடம்பெயர்ந்து, உண்பதற்கு உணவின்றி, குடிதண்ணீர், மருந்து வசதிகள் இன்றி, மர நிழல்களில் அவலப்பட்டுக்கொண்டிருக்கும் மக்களைக் காப்பாற்றுவதற்கு ஜனாதிபதிக்கு அக்கறையில்லை. அந்த மக்களைப்பற்றி சிறிதும் கூடக் கவலைப்படாமல் மடுமாதா திருவிழாவை நடத்துவதற்கும், அதில் தெற்கு மக்களைக் கலந்துகொள்ளச் செய்வதற்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முயற்சித்து வருகின்றார்.

- இவ்வாறு குற்றஞ்சாட்டியிருக்கின்றார் குமுறுகிறார்- ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா.

இது தொடர்பான செய்திக் குறிப்பு ஒன்றை ஊடகங்களுக்கு அனுப்பி வைத்திருக்கும் ஜயலத் எம்.பி., ஜனநாயக நாட்டில் ஏன் இப்படியான பாரபட்சம் என்றும் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆவணிமாதத் திருவிழா இம்முறை மடுக்கோவிலில் நடைபெறமாட்டாது

### மன்னார் ஆயர் இராயப்பு அறிவிப்பு

கொழும்பு, ஒக. 08

மடு அன்னையின் திருச்சொரூபம், ஆலயத்தின் தூய்மைப் பணிகள் முடிவுற்றதும் கொலுவேற்றம் செய்யப்படும்.

- இவ்வாறு மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக மடுக் கோவிலில் இருந்து தேவன்பிட்டிக்குக் கொண்டுசெல்லப்பட்ட மடு அன்னையின் திருச்சொரூபம் தற்போது மன்னார்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கச்சதீவை இலங்கையிடமிருந்து மீளப்பெறக்கோரி இந்திய உச்சநீதிமன்றில் ஜெயலலிதா மனு

இலங்கையிடமிருந்து கச்சதீவை மீளப் பெறுவதற்கு மத்திய அரசிற்கு உத்தரவிடக் கோரி, முன்னாள் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா சார்பில் மனு ஒன்று நேற்று இந்திய உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

ஜெயலலிதாவின் சட்டத்தரணியான சிறிகலா குரு கிருஷ்ணகுமார் என்பவரே இந்த மனுவைத் தாக்கல் செய்தார் என்று இந்தியச் செய்திகள் தெரிவித்திருக்கின்றன.

இந்திரா காந்தியின் காலத்தில் இந்திய அரசமைப்பில் எந்தவித மாற்றமும் செய்யப்படாமல் கச்சதீவு இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்டது என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அத்துடன், தமிழக மீனவர்கள் அங்கு தங்கி மீன்பிடிக்கும் உரிமையைப் பெற்றுக் கொடுக்க மத்திய அரசிற்கு உச்சநீதிமன்றம் உத்தரவிடவேண்டும் என்றும் அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது. (சி)

## 5 லட்சம் பூனைகள் சீனாவில் தேடிப்பிடிப்பு

சீனாவில் பீஜிங் நகரில் இன்று ஆரம்பமாகும் ஒலிம்பிக் போட்டிகளை முன்னிட்டு, உரிமையாளர்களால் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட சுமார் 5 லட்சம் பூனைகள் பிடிக்கப்பட்டு கொல்லப்படுவதற்காக அனுப்பப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பூனைகள் சிறிதும் அசைய முடியாத நிலையில் பெரும் எண்ணிக்கையான கூண்டுகளில் அடைக் கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளன எனவும் அறிவிக்கப்பட்டது. (சி)

## குடாநாட்டின் சிவில் நிர்வாகத்தை மேலும் சீராக்க கோத்தபாய அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஒக 8

குடாநாட்டு மக்களின் தேவைகளை உரியவாறு நிறைவேற்றி, இங்கு சிவில் நிர்வாகத்தை மேலும் சீராக்குவதற்கு உரிய நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொள்ளுமாறு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியை அறிவுறுத்தினார்.

பாதுகாப்புச்செயலாளர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்தார்.

அவர் நேற்றுக் காலையில் இரா ணுவத் தளபதி லெப் ஜெனரல் சரத்பொன் சேகா, கூட்டுப்படை தளகத்தர் எயர்மார் ஷல் டொனால் பெரேரா ஆகியோர் சகிதம் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார்.

யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜென

(12 ஆம் பக்கம் பார்க்க)

**புலமைப்பரிசில் பரீட்சை விசேட மாதிரி வினாத்தாள்**

*வவுனியா மாவட்டத்தின் பிரபல ஆசிரியர்*

**திரு.எஸ்.தீபன்**

*தயாரித்தது*

உள்ளே I + II ஆம் பக்கங்களில்

## இந்தியக் கடற்பகுதிக்குள் அத்துமீறி நுழைந்த 14 இலங்கை மீனவர் கைது

தூத்துக்குடி, ஒக. 08

தூத்துக்குடி, கன்னியாகுமரி கடற்பகுதியில் நேற்று அத்துமீறி மீன்பிடித்த இலங்கை மீனவர் 12 பேர் கடலோரப் பாதுகாப்பு படையினரால் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து மேலும் வெளியான தகவல்கள் வருமாறு:-

கன்னியாகுமரி கடல் பகுதியில் நேற்றுப்பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அங்கு இருவேறு இடங்களில் இந்தியக் கடற்பகுதிக்குள் அத்துமீறி மீன்பிடித்துக்கொண்டிருந்த 12 இலங்கை மீனவர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச சந்தையில் எண்ணெய் விலை வீழ்ச்சி

### இலங்கையில் இப்போதைக்கு விலைக்குறைப்பு இல்லை

கொழும்பு, ஒக. 08

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய்யின் விலையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. எனினும் இலங்கையில் உடனடியாக எரிபொருள்களின் விலைகள் குறைக்கப்படமாட்டா என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் அஜந்தா டி மெல் குறிப்பிட்டுள்ளார்.

"எரிபொருள் விலைகள் மாதாந்த அடிப்படையிலேயே கணிப்பிடப்படுகின்றன. நாளாந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பிலிருந்து கடத்தப்பட்ட யுவதி கொழும்பில் வாகனத்திலிருந்து தப்பினார்!

கொழும்பு, ஒக 8

மட்டக்களப்பில் கடந்த செவ்வாய்க்கிழமை இனந்தெரியாத குழுவொன்றினால் கடத்தப்பட்ட 19 வயதுடைய யுவதி ஒருவர், கொழும்புக்குக் கொண்டுவரப்பட்ட வேளை கடத்தல்காரர்களின் பிடியிலிருந்து தப்பியுள்ளார்.

செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு நூல்நிலையத்திற்கு அருகில் வைத்து ஆயுதக் குழுவொன்று தன்னைக் கடத்தியது என அந்த யுவதி தெரிவித்துள்ளார். குறிப்பிட்ட வாகனத்தில் மேலும் நான்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

Lifeline

மீண்டும் வாழ்வோம்



சூரியன் அலைகளில் (யாழ்ப்பாணம் 93 Mhz)
சனிக்கிழமைகளில் காலை 6.00 மணிமுதல் 8.00 மணிவரை
மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியினை
நீங்கள் கேட்கலாம்.

உங்கள் கதைகளை கேளுங்கள்

உள் நாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கான மனிதாபிமான பணிகள் குறித்த தகவல்களை தாங்கி வருகின்றது மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சி. இது உங்களுக்காக உங்கள் கதைகளை சொல்லும் ஒரு நிகழ்ச்சி.

தொடர்புகளுக்கு: மீண்டும் வாழ்வோம்சு, த.பெ.எண் 1039, கொழும்பு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

**LUTHER SELVARAJAH MEMORIAL ANNUAL TENNIS TOURNAMENT - 2008**
**CONDUCTED BY: JAFFNA COLLEGE STAFF TENNIS CLUB**

1. Entries extented for this tournament up to 15th August, 2008 and the Draw will take place on the same day.
2. The Tournament is opened to all clubs, schools and Institution.
3. The Application will be available at the following Address: Jaffna College Undergraduate Dept., 464, Hospital Road, Jaffna.
4. The Draw will take place on 15th August 2008, at 10.30 a.m. at the above address:
5. EVENTS:
   Under 15 Boys singles - Under 15 Boys Doubles
   Under 15 Girls singles - Under 15 Girls Doubles
   Under 20 Boys singles - Under 20 Boys Doubles
   Under 20 Girls singles - Under 20 Girls Doubles
   Men's Open Singles - Men's Open Doubles
   Mixed Doubles - Veterans Doubles
6. All the applications should be sent:- The Secretary, Staff Tennis Club, Jaffna College, Vaddukoddai.

Principal.

# திட்டமிடல் முதுகலை மாணி கற்கைநெறி முதலாம் அணியில் 37 பேர் சித்தி

யாழ்ப்பாணம், ஒக 8

யாழ்.பல்கலைக்கழக பட்டப்படிப்புகள் பீடத்தின் முது கலை மாணி திட்டமிடல் மாணவர்களின் பெறுபேறுகள் நேற்று வெளியாகின.

முதுகலை மாணி திட்டமிடல் கற்கை நெறியில் முதலாவது அணியில் 37பேர் சித்தியடைந்துள்ளனர் என்று திட்டமிடல் முதுமாணி கற்கை நெறியின் இணைப்பாளர் வாழ்நாள் பேராசிரியர் பி.பாலசுந்தரம் பிள்ளை தெரிவித்தார்.

சித்தியடைந்தோர் விவரம் வருமாறு:

**அதிவிசேட சித்தி**

திருமதி ஆர்.மோகனேஸ்வரன், பி.செந்தில்நந்தனன், திருமதி. எஸ் தெய்வேந்திரம், கே.தெய்வேந்திரம்.

**விசேட சித்தி**

எவ்.எக்ஸ்.அன்ரன், சி.அன்ரன் மோகன்றாஸ், ரி.அருணகிரிராஜா, திருமதி கே.ஜீவகன், செல்வி கே.குகராஜன், கே.மகேஸ்வரன், சி.மனோகரன், கெ.பரந்தாமன், ஆர்.பத்மநாதன், பி.பிரபாகர், செல்வி வி.பொன்னு, ரி.புவனேந்திரம், சி.ஏ.ரகுநாதன், எம்.ஜே.சாந்தசீலன், திருமதி ஏ.சாந்தசீலன், எஸ். சத்தியசீலன், செல்வி எம்.என்.ஏ.செல்வகுமார்சாமிநாதர், எஸ். சிவகுமாரன், என்.சூரியராஜ், கே.ஸ்ரீபாஸ்கரன், என். சுரேஸ்குமார், என்.தயாளன், திரு மதி எம். ஜே.துஷ்யந்தன்.

**சித்தி**

ஆர்.சந்திரசேகரசர்மா, கே.கோகுலன், ரி.மகேஸ்வரகுமார், எஸ்.பகீரதன், ஜி.பற்குணராசா, எம்.பிரதீபன், ஈ.பிரேமராஜன், கே.இராசையா, என்.சர்வேஸ்வரன், திருமதி ஆர்.உதயரட்ணம்.

(அ-1-202-203)

## தேசிய அடையாள அட்டைகள்: ஒரு தொகுதி வந்து சேர்ந்துள்ளன

யாழ். செயலகத்திற்கு ஒரு தொகுதி தேசிய அடையாள அட்டைகள் நேற்று வந்து சேர்ந்துள்ளன என்று மேலதிக அரச அதிபர் ஆ. சிவகாமி தெரிவித்தார்.

அண்மையில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் உட்பட பொதுமக்கள் அவசர தேவைகளுக்கென விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருந்தனர். அவர்களில் ஒருதொகுதியினருடைய அடையாள அட்டைகளே வந்து சேர்ந்துள்ளன.

முன்னுரிமை அடிப்படையில் விண்ணப்பித்தவர்கள் யாழ். செயலக அடையாள அட்டைப் பகுதியில் வந்து விசாரித்து அறியுமாறு தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## மரண அறிவித்தல்

### திருமதி சொர்ணம்மா தம்பிமுத்து



(நயினாதீவு- 6)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், அரசடி வீதி, யாழ்ப்பாணம், வெள்ளவத்தை ஆகியவற்றை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சொர்ணம்மா தம்பிமுத்து நேற்று (07.08.2008) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் திரு வே.க.த.தம்பிமுத்துவின் (உரிமையாளர், தாமோதர விலாஸ், ஸ்ரீ .இராமகிருஸ்ணா, யாழ்ப்பாணம்) அன்புத் துணைவியும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி - செல்லம்மா தம்பதியினரின் மூத்த புத்திரியும், காலஞ்சென்றவர்களான தம்பையா - இராமசாமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், சச்சிதானந்தன்(கணக்காளர்), சிவானந்தன் (வர்த்தகர், தலைவர், அமுதசுரபி அன்னதான சபை, நயினாதீவு), அருளானந்தன் (தாமோதர விலாஸ் - யாழ்ப்பாணம்), அம்பிகை(நியூசிலாந்து), குகானந்தன்(வர்த்தகர்), அம்பாலிகை (கொழும்பு), அமுதாம்பிகை (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பரமேஸ்வரி, குருகுலராணி, சகுந்தலாதேவி, டாக்டர் இராமச்சந்திரன் (நியூசிலாந்து), வெள்ளிவீதியார் செஞ்சுடர், வைத்திய கலாநிதி மருதையினார், கருணாரட்ணம்(லண்டன்), ஆகியோரின் அன்பு மாமியாரும், சாம்பவி (யா/இந்து மகளிர் கல்லூரி), கலாநிதி அனசூயா (நியூசிலாந்து), கலாநிதி சுமங்கலை (நியூசிலாந்து), ஆரணி, பிரணவன் (றோயல் கல்லூரி, கொழும்பு), வர்ஜிதா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம், இராமச்சந்திரன், தனலெட்சுமி மற்றும் சாந்தலிங்கம் (ஓய்வு பெற்ற அதிபர்) ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இத்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*61A, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.*
*T.P: 0212228108* (77041)

தகவல்:
த.அருளானந்தன் (மகன்)

## 31ஆவது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில்
05 ★ 07 ★ 1932



விண்ணில்
07 ★ 07 ★ 2008

திருமதி
### அமிர்தலிங்கம் தெய்வானைப்பிள்ளை

எமது அன்புத் தாயார் அமரர் திருமதி அமிர்தலிங்கம் தெய்வானைப்பிள்ளை அவர்கள் இறைபதம் எய்திய செய்தி கேட்டு எமது இல்லம் வந்து அனுதாபம் தெரிவித்தோருக்கும், இரங்கல் செய்தி அனுப்பிய கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இருந்து தொலைபேசி மூலம் தமது துயரைப் பகிர்ந்தோருக்கும், தந்தி மூலம் துயரைப் பகிர்ந்தோருக்கும், அனைத்து வழிகளிலும் உதவிய நல்ல இதயங் கொண்ட உற்றார், உறவினர் மற்றும் நண்பர்களுக்கும், எமது தாயார் நோயுற்ற வேளையில் சகல வழிகளிலும் உதவிய யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்களுக்கும், தாதி மார்களுக்கும், ஊழியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை இருகரம் கூப்பி தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்துக் கல்லூரி வீதி,
பண்டத்தரிப்பு.
0114721422
0776849140 (77039)

குடும்பத்தினர்.
அ.தயாகுணநாதன் (J.P)


**தேவை**

நல்ல நிலையிலுள்ள போட்டோ பிரதி இயந்திரம் தேவை. (Sharp, Canon - Anlog, Digital) தொடர்பு: 222 5891, 222 3423.




**விற்பனைக்கு**

நல்லின தென்னம்பிள்ளைகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-
அல்பிரட்யோகம், தவசிகுளம், மிருசுவில்.
T.P: 060 221 9015, 077 6042318.

**வெளிவந்து விற்பனையாகிறது O/L விஞ்ஞானம்**

விஞ்ஞானம் - O/L மாதிரி
வினாத்தாள் விடையுடன் புதிய பாடத் திட்டத்திற்கமைவாக தயாரிக்கப்பட்டது.
பகுதி - I பல்தேர்வு வினாக்கள்
பகுதி - II (அ) அமைப்புக்கட்டுரை வினாக்கள்
பகுதி - III (ஆ) கட்டுரை வினாக்கள்
விலை - 50/=
தொகுப்பு: இ.நிர்மலன்
St.Anthony's College, Colombo - 13
O/L - பௌதிகவியல்
O/L - இரசாயனவியல்
கடந்த 27 வருட (1980 ல் இருந்து) கடந்தகால வினாக்கள் அலகு ரீதியாக விடையுடன் தொகுக்கப்பட்டுள்ளது.
பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். | பூபாலசிங்கம் புத்தகசாலை நல்லூர்.


**தவறிவிட்டது**

சங்கானை பட்டினசபை வீதியைச் சேர்ந்த இ.நல்லையா என்பவரின் C.49.மோட்டார் சைக்கிள் ஆவணங்கள், அராலி வீதி சங்கானைக்கும், நவாலி வீதி மானிப்பாய்க்கும் இடையில் 4.8. 2008 தவறிவிட்டன. இத்துடன் பாதுகாப்புப் படையினரின் வாகன அனுமதிப்பத்திரம், டயறி உட்பட 3 CR கொப்பிகள் தவறிவிட்டன. இதனைக் கண்டெடுத்தவர்கள், மானிப்பாய் வலிகாமம் ப.நெ.வள அபிவிருத்திச் சங்கங்களின் கொத்தணி (பிப்பிலி சுடலைச் சந்தி) காரியாலயத் தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்

பட்டின சபை வீதி,
சங்கானை.

தகவல்:
இரத்தினம் நல்லையா

**தவறிவிட்டது**

தம்பாளை அச்சுவேலி, மார்க்கண்டு உதயகுமார் என்பவரது TVS மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் யாழ்ப்பாணத்துக்கும், நாவாந்துறைக்கும் இடையில் தவறிவிட்டன. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
பெரியகடை மார்க்கட் (பழக்கடை வீதி)
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 077 [illegible] 021 2228551

## மரண அறிவித்தல்கள்

### யோசவ் எட்மன் செபஸ்ரியாம்பிள்ளை (விதானையார்)



ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், தற்போது கனடாவில் வசித்து வந்தவருமான யோசவ் எட்மன் செபஸ்ரியாம்பிள்ளை நேற்று (07.08.2008) வியாழக்கிழமை கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - அழகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மரியக்கோபா அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான டெய்சி அருளம்மா (பேபி), தங்கம்மா, பாவுலுப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், கலாவதிகொவர்ட் (கந்தானை), கலாநிதி பஸ்ரியாம்பிள்ளை (இளைப்பாறிய உத்தியோகத்தர் - மாநகரசபை தற்போது கனடா), சந்திரா குமரகுருபன் (இளைப்பாறிய உத்தியோகத்தர், மாநகர சபை தற்போது லண்டன்), ஜெயதேவி அன்ரன் (லண்டன்), யசிந்தா கிறிஸ்ரி (லண்டன்), அன்ரன்விஜயசுந்தர் (கனடா), மனோகரன் டேமியன் (கனடா), எறின் ஹென்றி (கனடா), யூட் மோகன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அமலா, தேவதாஸ், நவரட்ணராஜா (மாநகரசபை, யாழ்.) அவர்களின் அன்புத்தாய்மாமனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 16.08.2008 சனிக்கிழமை கனடாவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தொடர்புகளுக்கு:*
*011 - 416 - 2873041*
*(கனடா)*

தகவல்:
எம்.என்.நவரட்ணராஜா
(மருமகன்)
*981/13, 1ஆம் ஒழுங்கை, வளன்புரம், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.*

### பரமு தாமோதரம்பிள்ளை

(இளைப்பாறிய பிரதம எழுது வினைஞர், மின்சாரசபை, கொழும்பு )



யாழ்ப்பாணம், அரியாலையைப் பிறப்பிடமாகவும் லண்டன் மாநகரை வதிவிடமாகவும் கொண்ட பரமு தாமோதரம் பிள்ளை புதன்கிழமை (06.08.2008) அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் பரமு - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற சிவசோதியின் அன்புக் கணவரும் கிரிஜாவின் அன்புத்தந்தையும், சிறீதரனின் மாமனாரும் விந்தியா, நிறோஷன், சஞ்சீவன் ஆகியோரின் பேரனும் காலஞ் சென்றவர்களான சீவரட்ணம், பொன்னுத்துரை, வீரசிங்கம், முத்துக்குமாரசுவாமி, விபுலானந்தன் மற்றும் புவனேஸ்வரி, தருமலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுப்பிரமணியம், சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருகனும், காலஞ்சென்றவர்களான Dr.சிற்றம்பலம், பாலசுந்தரம், அலிஸ் நோனா, மற்றும் பத்மாவதி, கனகாம்பிகை, சீலா, றீற்றா, ஹேமலதா, அனந்தலக்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (10.08.2008) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*262/3 , கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்.*

தகவல்:
ப. தருமலிங்கம் (சகோதரர்)

### கபிரியேல் அந்திரேசப்பு



ஊறணி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட கபிரியேல் அந்திரேசப்பு நேற்று (07.08.2008) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கபிரியேல் - சிசிலியா தம்பதியரின் ஏக புதல்வனும், காலஞ்சென்றவர்களான இராசேந்திரம் - மரியம்மா தம்பதியரின் மருமகனும், வியாகுலமரியின் அன்புக் கணவரும், தங்கமலர், யசிந்தா (நோர்வே), அருள்தாஸ் (பிரான்ஸ்), அமலதாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மேரியோசப், கைத்தாம்பிள்ளை (நோர்வே), ரஞ்சனாவதி (பிரான்ஸ்), வசந்தி (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு மாமனாரும், சாந்தமலர், சாந்தசீலன், சாந்தசீலி, சாந்தமரின், சுதர்சன் (நோர்வே), சுதா (நோர்வே), சுபேஸ் (நோர்வே), அஸ்வினி (பிரான்ஸ்), வேர்ஜினி (பிரான்ஸ்), றொஷானி (பிரான்ஸ்), டிலான் (பிரான்ஸ்), அலோசியஸ், யூட் விமலநாதன், அஞ்சலிதேவி ஆகியோரின் பாசமிகு பேரனும், ஒஸ்ரின், அன்ட்றூ, ஐஸ்ரன், யூடினி, யூஜினி, அபிஷனா, அபிஷாந் ஆகியோரின் அருமைப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (08.08.2008) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் நடைபெற்று, பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*33/2, குருசோ வீதி, சுண்டுக்குளி.*

தகவல்:
மே.சாந்தசீலன் (பேரன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைக்கு தீர்வை முன்வைக்கும் வேளாண்மைக் கண்காட்சி

## 12ஆம் திகதி தொடக்கம் 3 தினங்களுக்கு நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக.8

குடாநாட்டு மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் சிலவற்றுக்குத் தீர்வை முன்வைப்பதாகவும் மாணவர்களின் ஆற்றலை மேம்படுத்துவதாகவும் விவசாய வேளாண்மைக் கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் மற்றும் அதன் சூழலிலுள்ள விவசாய ஆராய்ச்சி நிலையம், செயற்கைமுறை சினைப்படுத்தும் நிலையம் என்பவற்றை மையமாகக் கொண்டு கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

விவசாயத் திணைக்கள விரிவாக்கற் பிரிவு, விவசாயத்திணைக்கள ஆராய்ச்சிப் பிரிவு, கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடம் என்பன ஒன்றிணைந்து பிரமாண்டமான முறையில் எதிர்வரும் 12ஆம் திகதி தொடக்கம் 14ஆம் திகதிவரை இக் கண்காட்சியை நடத்தவுள்ளன.

குடாநாட்டு மக்கள் தற்போது எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளான வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, மந்த போசணை நிலை, உணவுப் பண்டங்களின் பேண்தகவின்மை, எரிபொருள்களின் பாரிய விலையேற்றம், நிலத்தடிநீர் மாசடைதல், வளி மாசடைதல், நிலம் தன் விளைச்சல் தகவை இழந்துநிற்றல், விவசாய விளைபொருள்கள் இரசாயனங்களால் நஞ்சூட்டப்பெறல், பாலும் பாற்பொருள்களும் சாதாரண மக்களால் வாங்க முடியாத அளவிலான விலையேற்றம், விவசாய விளைபொருள்களின் விலைத்தளம்பல் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வை முன்வைப்பதாக இக் கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

**மாணவர்களின் ஆற்றலை மேம்படுத்தும் கண்காட்சி**

மாணவர் பெற்றுக்கொள்ள வேண்டிய பல்வேறு பாடங்கள் சார்பான எண்ணக் கருக் களையும், எதிர்கால வாழ்வியலுடன் தொடர் புடைய அனுபவங்களையும் இக் கண் காட்சி கொண்டிருக்கும்.

உயிரியல், விஞ்ஞானம், விவசாயம், இரசாயனவியல், மனைப்பொருளியல் போன்ற பாடங்களைக் கற்போருக்கு வேண்டிய செயல்முறை அனுபவங்களை இக்கண்காட்சியினூடு பெற்று பயன் அடைய முடியும்.

ஒட்டுதல், பதிவைத்தல், விதைத் தொழில்நுட்பம், மண் வகைகளும் மண் பரிசோதனையும், ஒருங்கிணைந்த பீடைப் பரிபாலனம், ஒன்றிணைந்த பயிர்ப்போசணைத் தொழில்நுட்பம், பயிர்ச் செய்கையில் காலநிலையை ஆளுகை செய்யும் தொழில்நுட்பம் போன்றனவும் உணவுப் பொருள்களை நற்காப்புச் செய்யும் உத்திகள், உள்ளூர் மூலப்பொருள்களைக் கொண்டு தரமான உணவுப் பண்டங்களை உற்பத்தி செய்யும் உத்திகள், உணவுப் பொருள்களின் பெறுமானம் அதிகரிக்கும் செயற்பாடுகள் போன்றவை செயல் ரீதியில் விளக்கப்படும்.

புவியியல் சுற்றாடற்கல்வி போன்ற பாடங்களுக்குரிய பல்வேறு எண்ணக் க்ருக்களும் அங்கு காட்சிப்படுத்தப்படும்.

இடைநிலைக் கல்வியில் விவசாயப் பாடத்தில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட அலகுகளான மண்ணின்றிய விவசாயம், பாதுகாக்கப்பட்ட விவசாயம் போன்றவை பற்றிய கருத்தியல் காண்பியங்களும் இங்கு காட்சிப்படுத்தப்படும். (202)

# ஐக்கிய அபிவிருத்தி நிதியம் 66 பேருக்கு வாழ்வாதார உதவி

யாழ்ப்பாணம், ஒக.8

ஐக்கிய அபிவிருத்தி நிதியம் வாழ்வாதார செயற்றிட்டத்தின் கீழ் இரண்டாம் கட்டமாக சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 66 பயனாளிகளுக்கு 10 லட்சம் ரூபா நிதியுதவி வழங்கியுள்ளது.

மந்துவில் ஜே/345, ஜே/346, ஜே/347 ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த பயனாளிகளுக்கே இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ.ரகுநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நிதியத்தின் இணைப்பாளர் இ.ஹரிகரன், வாழ்வாதாரத் திட்ட உத்தியோகத்தர் திருக்குமரன் உட்படப் பலர் பங்குபற்றினர். (202)

# கோப்பாய் லயன்ஸின் பதவியேற்பு விழாவும் கௌரவிப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஒக.8


கோப்பாய் லயன்ஸ் கழகத்தினரின் 25ஆவது ஆண்டு பதவியேற்பு வைபவமும் கௌரவிப்பு விழாவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நடைபெறவுளளன.

லயன்.சந்திரகலா சில்வெஸ்ரர் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழகங்களின் முன்னாள் பணிப்பாளர் லயன் சக்கரவர்த்தி விஜயநாதனும், கௌரவ விருந்தினர்களாக முன்னாள் மாவட்டத் தலைவர் லயன் எஸ்.இராகவன், யாழ்.மேல திக அரச அதிபர் லயன் ஆ.சிவசுவாமி ஆகி யோர் கலந்து கொள்வர்.

ஆளுநர் சபையால் தெரிவு செய்யப்பட்ட கோப்பாய் பிரதேசத்திலுள்ள 10 சாதனையாளர்கள், சேவையாளர்களாகத் தெரிவு செய்யப்பட்ட 16 கிராமசேவை அலுவலர்கள், கடந்த ஆண்டு ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் திறமைச் சித்தி பெற்ற 12 மாணவர்கள், கடந்த ஆண்டு ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் திறமைச் சித்திபெற்ற 16 மாணவர்கள் ஆகியோர் இந்நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்





சாவகச்சேரி அம்பிகா மருந்தக அனுசரணையுடன் தென்மராட்சி கலைமன்ற மண்டபத்தில் அண்மையில் கதம்ப விழா இடம்பெற்றது. சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவிகளின் கும்மி நடன நிகழ்வை முதலாவது படத்திலும் நிகழ்வில் இசை விருந்து வழங்கிய இசை ஆசிரியர் பொன்.ஸ்ரீவாமதேவனுக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிபதி அ.பிரேமசங்கர் பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். *(படங்கள்: தென்னவன்)*

# கலைத்தூது கலையகத்தில் 'எரேமியர்' திரைப்படம்

யாழ்ப்பாணம், ஒக.8

யாழ்.திருமறைக் கலாமன்றத்தில் திரைப்படப் பிரிவினரால் நாளை சனிக்கிழமை பிற் பகல் 3.45 மணியளவில் கலைத்தூது கலையகத்தில் 'ஏரேமியா' என்னும் ஆங்கிலத் திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது.

பலஸ்தீனத்தில் கி.மு.7ஆம், 6ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த எரேமியாஸின் வாழ்க்கைப் பின்னணியோடு, ஜெருசலேம் நகரின் வீழ்ச்சியையும் சித்திரிப்பதாக இத்திரைப்படம் உள்ளது.

இலவசமாகக் காண்பிக்கப்படவுள்ள 'எரேமியா' திரைப்படக் காட்சியில் ஆர்வலர்கள் அனைவரும் பங்கு கொள்ளலாமென திருமறைக் கலாமன்றம் தெரிவித்துள்ளது. (04)

# பருத்தித்துறை பி.செ.பிரிவில் 54 வீடுகள் அமைக்கத் திட்டம்

வடமராட்சி, ஒக.8

'நீர்ப்' வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கட்டம் மூன்றில் பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் 54 வீடுகள் அமைக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பிரிவில் உள்ள ஓடக்கரை, தும்பளை தெற்கு, அரசம்புலம் ஆகிய கிராமசேவை அலுவலர் பிரிவுகள் இவ்வீடமைப்புத் திட்டத்திற்கென 'நீர்ப்' நிறுவனத்தினால் தெரிவு செய்யப்பட்டிருந்தன.

வீடுகள் பெறுவதற்காக ஓடக்கரையில் 13 குடும்பங்களும், தும்பளை தெற்கில் 16 குடும்பங்களும் அரசம்புலத்தில் 25 குடும்பங்களும் பயனாளிகளாத் தெரிவாகியுள்ளனர். (202-236)

# விஷேட தேவையுடைய மாணவர்களுக்கு சிறுவர் முகாம்

யாழ்ப்பாணம், ஒக.8

விஷேட தேவையுடைய மாணவர்களுக்கான சிறுவர் முகாமும் அவர்களது பெற்றோருக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.வலயக் கல்வி முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குறிப்பிட்ட மாணவர்கள் மற்றும் பெற்றோர்களைக் கலந்துகொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (202-302)

# செல்வச்சந்நிதி ஆலய கட்டடப் பணிகள் நிதி இல்லாமையால் இடைநடுவில்

கரவெட்டி, ஒக.8

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் உட்கட்டமைப்புப் பணிகள் யாவும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

கட்டடப் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு வேண்டிய நிதி இல்லாமையாலேயே இடைநிறுத்தப்பட்டுள்ளன என ஆலய புனரமைப்புக் குழுவின் செயலாளர் எஸ்.தெய்வேந்திர ஐயர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

எம்மிடம் இருந்த நிதியைப் பயன்படுத்தி ஆலயப் புனரமைப்புப் பணிகளை ஆரம்பித்தோம். சுற்று மண்டப வேலைகள் நடைபெற்று வந்தன. தொடர்ந்தும் செய்வதற்கு நிதி இல்லாமையால் வேலைகள் யாவும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

கட்டடப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு வேண்டிய நிதி உதவியை வழங்குமாறு நாம் பொது மக்களைக் கோரியிருந்தோம். ஜனாதிபதி, இந்து கலாசார அமைச்சர் ஆகியோரிடமும் கோரிக்கை விடுத்திருந்தோம். எனினும் இதுவரை எந்தவித நிதியுதவியும் கிடைக்கவில்லை. இதனால் கட்டடப் பணிகளை இடைநிறுத்த வேண்டி ஏற்பட்டது - என்றார். (202-70)

# சாரதி பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஒக.8

இலங்கை மதுவரித் திணைக்களத்தில் மோட்டார் வாகன மதுவரி சாரதி வகுப்பு II பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

18 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்ட 8ஆம், 9ஆம் தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றபின் 3 வருடகால சேவையாற்றிய அனுபவம் கொண்ட, பகலிலும், இரவிலும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றக் கூடியவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னதாக மதுவரி ஆணையாளர் நாயகம், இலங்கை மதுவரித் திணைக்களம், இல.28, ஸ்ரெப்பின் வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட் கப்பட்டுள்ளது. (202-236)

## வடமராட்சி வடக்கில்

# 'கமநெகும' திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட 41 வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன

வடமராட்சி, ஒக.8

வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) பிரதேச செயலர் பிரிவில் 'கமநெகும' திட்டத்தின் கீழ் சென்ற ஆண்டு அனுமதிக்கப்பட்ட 45 வேலைத் திட்டங்களில் 41 வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இந்தவேலைத் திட்டங்களுக்கென 19.41 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

அனுமதிக்கப்பட்ட 45 வேலைத் திட்டங்களில் சென்ற ஆண்டு 27 வேலைத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு அவற்றிற்கென 8.52 மில்லியன் ரூபா செலவிடப்பட்டிருந்தது. மிகுதியான 18 வேலைத் திட்டங்களில் 14 வேலைத் திட்டங்கள் இந்த வருடத்தில் இதுவரை காலப்பகுதியில் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவ் வேலைத் திட்டங்களுக்கென 7.488 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

எஞ்சிய [illegible] தற்போது [illegible] பதாக வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தகவல் தெரிவித்தார். (202-236)



வலி.தென்மேற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டறவுச் சங்கத்தால் சண்டிலிப்பாய்ச் சந்தியில் பாற்பொருள் விற்பனை நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி செல்வி சி.பி. மரியதாஸ் நாடாவை வெட்டி நிலையத்தைத் திறந்து வைப்பதையும் வலி.தெற்கு மேற்குப் பிரதேச செயலக நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் திருமதி சி.பொன்மலர், கால்நடை வளர்ப்போர் கூட்றவுச் சங்கத் தலைவர் தி.இராஜ்குமார் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரியில் போசாக்கு மாத விழிப்புணர்வுக் கண்காட்சிகள்

யாழ்ப்பாணம், ஓக 8

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட 24 குடும்பநல சேவையாளர் பிரிவுகளில் நாளை சனிக்கிழமை போசாக்கு மாத விழிப்புணர்வுக் கண்காட்சிகள் நடத்தப்படவுள்ளன.

கண்காட்சி நடத்தப்படவுள்ள நிலையங்கள் வருமாறு:

நாவற்குழி மகாவித்தியாலயம், கைதடி தெற்கு பராசக்தி பாலர் பகல் பராமரிப்பு நிலையம், கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம், கைதடி வடக்கு அம்பிகை மாதர் கி.அ.சங்க மண்டபம், மட்டுவில் தெற்கு ஆரம்பசுகாதார நிலையம், மந்துவில் ஆரம்ப சுகாதார நிலையம், கெற்பேலி சிவ சக்தி சனசமூக நிலையம், கச்சாய் ஆரம்ப சுகாதார நிலையம், நுணாவில் கிழக்கு பாரதி முன்பள்ளி, புத்தூர் சந்தி–மீசாலை வடக்கு சனசமூக நிலையம், சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையம், போக்கட்டி அ.த.க. பாடசாலை, சர சாலை பொது நூல் நிலையம் அருகில், கொடிகாமம் கச்சாய் உப அலுவலகம், கரம்பைக் குறிச்சி பாடசாலை, வரணி தெற்கு குமரணி முன்பள்ளி, மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயம், மிருசுவில் அ.த.க. பாடசாலை, மட்டுவில் வேரக்கேணி கலைமகள் முன்பள்ளி, வரணி வடக்கு அ.த.க. பாடசாலை, கெருடாவில் பாலமுருகன் முன்பள்ளி, மீசாலை கமலாம் பிகை வித்தியாலயம், சங்கத்தானை நாமகள் முன்பள்ளி.

## சிற்றூழியர் செயன்முறைப் பரீட்சை இன்றுடன் பூர்த்தியாகிறது

யாழ்ப்பாணம், ஓக.8

யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தால் கடந்த ஜூலை 14 ஆம் திகதி தொடக்கம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் ரீதியாக நடத்தப்பட்டு வந்த சுத்திகரிப்புத் தொழிலாளர் பதவிகள் நியமனத்துக்கான செயல்முறைப் பரீட்சைகள் இன்று வெள்ளிக்கிழமையுடன் நிறைவுக்கு வருவதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்தது.

இச் செயல்முறைப் பரீட்சைகள் 18 தொடக்கம் 30 வயதுக்குட்பட்டவர்களுக்காகவும் 30 தொடக்கம் 45 வயதுக்குட்பட்ட விண்ணப்பதாரிகளுக்காவும் இரு கட்டங்களாக நடைபெற்றன. இச் செயல் முறைப்பரீட்சையில் சுமார் மூவாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர் எனவும் இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை விரைவில் நடைபெறும் எனவும் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (1-350)

## பகவத்கீதை சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஓக.8

கோண்டாவில் கிழக்கு நாராயண வீதியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் ஆத்மீக சபையின் ஏற்பாட்டில் சபா மண்டபத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் பிற்பகல் 4.30 மணிமுதல் பகவத்கீதை சொற்பொழிவு இடம்பெறுகின்றது.

அந்த வரிசையில் கீதோபதேச வித்தகர் எஸ். கே. என். தவராஜாவின் சொற்பொழிவு 39 ஆவது வாரமாக இன்று இடம்பெறுகின்றது.

## விளையாட்டுப் பயிற்சி முகாம் இன்றுடன் பூர்த்தி

யாழ்ப்பாணம், ஓக.8

யாழ். வை.எம். சி. ஏயினால் பாடசாலைகளின் விளையாட்டு ஆசிரியர்களுக்கான பயிற்சி முகாம் இன்று பூர்த்தியடைகின்றது. நேற்று ஆரம்பமான இந்தப் பயிற்சி முகாமின் பூர்த்தி நிகழ்வும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளன. (1)

# கட்டுரைப் போட்டிக்கு தெரிவானோர் விவரம்

யாழ்ப்பாணம், ஓக 8

மக்கள் வங்கியின் அனுசரணையுடன் 'சண்டேரைம்ஸ்' பத்திரிகை நடத்தவுள்ள கட்டுரைப் போட்டிக்கு யாழ்.மாவட்டத்திலிருந்து போட்டியாளர்களைத் தெரிவு செய்தல் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இத்தகவலை மக்கள் வங்கியின் வட வலய உதவிப் பொது முகாமையாளர் த.க. ஆனந்தராசா தெரிவித்தார்

தெரிவு செய்வதற்காக அழைக்கப்பட்டவர்களின் விவரம் வருமாறு:

அ.அத்தியா (வண்ணா[illegible]ண்ணை), ஜே.தரணிகா (யாழ்ப்பாணம்), வை. நிரோஜன் [illegible]ரங்கால் மேற்கு), மோ.வேணு கானன் (ஆனைக்கோட்டை), [illegible] அபிஷனா (அரியாலை), எஸ்.சாந்தன் (சாவகச்சேரி), சி.மதுஷா (சாவகச்சேரி வடக்கு), அ. ரெபேக்கா (இளவாலை திருக்குடும்ப கன் னியர்மட மகாவித்தியாலயம்), ஜெ.ஜெய கணேசன்(கைதடி), சி.விதுஷன் (யாழ்ப் பாணம்), எச். மயூரகீர்த்தனன் (நீராவியடி), இ.தனேசன் (வரணி), பி.கஜரூபி (இள வாலை வடக்கு), பி.கஸ்ரோ (சாவகச் சேரி), ஞா.நிகீதினி (கரணவாய் மத்தி), ஞா.நிகீதன் (கரண வாய் மத்தி), யோ. மாதங்கி (கரண வாய் கிழக்கு). (202)

# இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு, ஓக.8

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் யாழ்ப்பாணம் வர்த்தக வங்கி, இலங்கை வங்கி என்பவற்றின் அனுசரணையுடன் 13 ஆவது ஆண்டாக நடத்தும் லீக் முறையிலான தாச்சி சுற்றுப் போட்டி யில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் (பத்திர காளி கோயில் அருகாமை) இடம்பெறும் ஆட் டத்தில் ஆனைக்கோட்டை சாவற்காடு மகாத்மா வி.கழகம் கோண்டாவில் மறுமலர்ச்சி வி.கவும் மோதுகின்றன. (1-86)

* * *

வலி.வடக்கு, ஓக.08

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அராலி வடக்கு ஐக் கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஐக்கிய விளை யாட்டுக் கழக மைதா னத்தில் இடம் பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

அராலி வானவில் வி.க அணி எதிர் அராலி கலை வாணி வி.க அணி.

ஏழாலை ஞான முருகன் வி.க. 'ஏ' அணி எதிர் மூளாய் வளர்மதி வி.க. 'பி' அணி.

## இரத்ததானமும் சிரமதானமும்

யாழ்ப்பாணம்,ஓக.8

இலங்கை வங்கியின் 69 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வங்கியின் வடபிராந்தியக் காரியாலயம் சிரமதானம் மற்றும் இரத்ததானம் ஆகிய நிகழ்வுகளை ஒழுங்கு செய்துள்ளது.

யாழ். மாவட்ட கிளைகளில் ஊழியர்க ளால் நாளை சனிக்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையில் இந் நிகழ்வுகள் இடம் பெறும். (202)

## நேற்றைய (07.08.2008) உதயனில் வெளியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 04 இன் விடைகள்

**வினாத்தாள் - 01**

01-3, 02-2, 03-3, 04-1, 05-F\E, 06-F, 07-1, 08-2, 09-2, 10-3, 11-2, 12-2, 13-3, 14-1, 15-2, 16-2, 17-1, 18-2, 19-3, 20-1, 21-2, 22-2, 23-3, 24-1, 25-1, 26-2, 27-2, 28-1, 29-3, 30-2, 31-3, 32-3, 33-2, 34-தவறு, 35-சரி, 36-தவறு, 37-2, 38-திரி, 39-பரி, 40-பதி

**வினாத்தாள் - 02**

01-அ-A-28, B-16, C-17, D-30
ஆ-A-45, B-15
இ-01-D, 02-B
ஈ-01-3 மடங்கு, 02-14cm, 03-33cm, 04-15 துண்டுகள், 05-உருD

02-01-சமாதானப் பேரவை, 02-பொதுமக்களை/சமாதானிகளை, 03-சமாதானத்திற்கு/சமாதானப்புறாவிற்கு, 04-அமைதி, சந்தோஷம், ஒற்றுமை, இன ஒருமைப்பாடு, 05-பயம், பீதி, துக்கம், கலகம், சஞ்சலம், 06-01-தாய்/தாயவள், 02- புறா, 07-கனாமிப் பேரவை போல, 08-இன- மத- மொழி, 09-சாவுமணிக் கோபுரத்தில், 10-யுத்தத்திற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. (இது போன்ற.......)

03-01-சம்மட்டி, 02-சீவுளி, 03-பனைவோலை, 04-பொலி, 05-சூளை, 06-மடி, 07-அடிக்கல் நாட்டுதல், 08-இயனக்கூடு, 09-மஞ்சாடி, 10-ஆப்பு.

04-01-Temple, 02-, Travel\Txip/Trap, 03-Signal, 04-Circle

05-01-சமூக சேவை, 02-நடை பாதை, 03-மீண்டும் வருக, 04-வெளிச்ச வீடு.

06-01-மஞ்சள் நீர், 02-தண்ணீர், 03-மருந்து நீர், 04-பன்னீர்.

07-01-மெழுகுதிரி, 02-லாம்பெண்ணெய்/மண்ணெண்ணெய், 03-ர(த்)துபாய், 04-அவ்.

08-01-அரிய இரு விழியான், 02-வானியல் தொலைக்காட்டி, 03-நுணுக்குக்காட்டி

09-01-பலா, 02-தேங்காய், 03-தக்காளி.

10-01-கூம்பம், 02-8, 03-5, 04-5.

11-01-ஆறுமுக நாவலர், தமிழ்ப்பணி, 02-அன்னை தெரேசா, சமூகப்பணி.

12-01-ஏரி, 02-தொனை , 03-தானை , 04-குளை 02-01-வான்/ஆகாயம், 02-அலுமினியம், 03-வாயு

13-01-மென்பந்து ஆட்டம், 02-துடுப்புமட்டை / பந்து/ (விக்கட்) கம்புகள்,03-11பேர்

14-01-98.4, 02-24 கரட், 03-தலதா மாளிகை, 04-பின்னவல, 05-ஈடிஸ் எஜிப்ரி/ அல்போபிக்ரஸ்

15-01-4kg, 02-96.00, 03-01-11 கம்பங்கள், 02-1000 மீற்றர்

16-பொருத்தமான கருத்துள்ள வாக்கியங்கள்.

**விடைகளில் சந்தேகங்கள் இருப்பின் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் நேரடியாகத் தொடர்புகொள்ளலாம்.**

**011-2399666/071-6850005/071-4273035**






## கண்ணீர் அஞ்சலி



எமது சக ஆசிரியர் திரு.க.பாலவிசாகன் அவர்களின் அன்புச் சகோதரி
*கனகசபாபதி கேதீஸ்வரி*
அவர்களின் மறைவையொட்டி துயரத்தில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆங்கில நெறி, பலாலி ஆசிரியர் கலாசாலை, திருநெல்வேலி.**

## கண்ணீர் அஞ்சலி



அமரர்
**வெற்றிவேலு சிவநாதன்**
**(சிவா அண்ணை)**

நல்லூரான் சேவடிக்கு காவடி நீ எடுத்து வந்தாய்
இம்முறை நீ வராமல் எங்கள் முகம் பாராமல்
கந்தனின் திருவடிக்கே நிரந்தரமாய் சென்றுவிட்டாய்.

எமது மதிப்பிற்குரிய நண்பன் வெற்றிவேலு சிவநாதன் (சிவா அண்ணை) அவர்கள் 05.08.2008 அன்று கொழும்பில் சிவபதமடைந்துவிட்டார். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ம.திலீஸ்குமார், அ.சத்தியசீலன் (சின்னத்தம்பி), ம.மயூரன், க.யோகேஸ்வரன் (ஈசன்).
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.


கணக்கீடு
A/L 2010
வங்கிக் கணக்கிணக்கற்கற்று
ஆரம்பம் நாளை 3 p.m.
A/L2009 புதிய பிரிவு
பங்குடமை
ஆரம்பம் நாளை 4p.m.
A/L2009 கம்பனி
ஆரம்பம் நாளை 5 p.m.
S.தவா B.Com (Hons) Acc.Spl)
Universal


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விறுவிறுப்பாக நடந்த கரப்பந்தாட்டத்தில் கேடயத்தைச் சுவீகரித்தது ஆவரங்கால் இந்து

வலி.வடக்கு,ஓக.8

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் இலங்கை வங்கியின் அனுசரணையுடன் நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஆவரங்கால் இந்து விளையாட்டுக் கழகம் 'ஏ' பிரிவில் சம்பியனாகத் தெரிவு செய்யப் பட்டுள்ளது.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் ஆட் டத்தில் ஆவரங்கால் இந்து விளையாட்டுக் கழகமும் அச்சுவேலி ஸ்ரீ விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

ஐந்து சுற்றுக்கள் கொண்ட இந்தப் போட்டியில் ஒவ்வொரு சுற்றும் ரசிகர்களை அந்தரத்தில் மிதக்கவும், அடுத்த பந்து யாருக்கு உரியது என்று திண்டாடவும் வைத்து விறுவிறுப்பான ஆட்டமாக காணப் பட்டது.

இந்தப் போட்டி ஆட்டம் சுமார் ஒரு மணித்தியாலமும் 40 நிமிடங்களும் இடம் பெற்று நிறைவுபெற்றமை சுட்டிக்காட்டக் கூடியதாகும்.

முதல் சுற்றில் ஆவரங்கால் இந்து விளை யாட்டுக்கழகம் முதல் 15 புள்ளிகளையும் விரைவாகப் பெற்றபோதிலும் தொடர்ந்து விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் காட் டிய கடும் எதிர்ப்புக் காரணமாக நீண்ட போராட்டத்தின் பின்னர் 25:23 புள்ளிகள் என்ற அடிப்படையில் முடிந்தது.

இரண்டாவது சுற்றை விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் மிகவும் இலகுவாக 25:17 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது.

மூன்றாவது சுற்றை இரு அணிகளும் வெற்றி பெறவேண்டும் என்ற இலக்குடன் விளையாடியமையினால் கடும் போராட் டம் இறுதிவரை காணப்பட்டது. 21 புள்ளி களில் இருந்து இரு அணிகளும் கடும் போராட்டத்தில் ஈடுபட்டபோதிலும் இறுதி யில் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் 29:27 என்ற அடிப்படையில் வெற்றி பெற் றது.

நான்காவது சுற்று இந்து விளையாட்டுக் கழகத்திற்கு மிகவும் வேண்டியதாக இருந் ததுடன் இந்தச் சுற்றில் வெற்றி பெற்றால் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய போதிலும் இறுதியில் இந்து விளையாட் டுக்கழகம் சுலபமான முறையில் 25:19 என்ற புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்று தலா இரண்டு சுற்றுகள் வெற்றி பெற்று இரு அணிகளும் சம நிலையில் காணப்பட்டன.

இறுதிச் சுற்று 15 புள்ளிகளுக்கு என்ற அடிப்படையில் விளையாடப்பட்டபோது இரு அணிகளும் எப்படியும் இந்த சுற்றை வெற்றிபெற வேண்டும் என்ற இலக்குடன் பெரும் சிரமத்துடன் கடும் முயற்சியெ டுத்து விளையாடினார்கள்.

போட்டி ஆரம்பமாகியதும் இந்து விளை யாட்டுக்கழகம் முன்னணியில் நின்று 8 புள்ளிகளை முதலில் பெற்றுக்கொண்ட போதிலும் இரண்டு புள்ளிகளே வேறுபாட் டில் காணப்பட்டன.

பக்கம் மாறியதும் மீண்டும் விக்னேஸ் வராவின் கையோங்கியது. இதனைத் தொடர இந்து விளையாட்டுக்கழகம் அனுமதிக் காது தமது முழுத்திறமையையும் வெளிப் படுத்தி இரு அணிகளும் விளையாட மைதா னத்திற்கு வெளியில் ஆதரவாளர்களின் கைதட்டலும் கூச்சலும் கூட மிகவும் உற்சா கமாகக் காணப்பட்டது.

ஆட்ட இறுதிநேரத்தில் இந்து விளை யாட்டுக்கழகம் தொடர் புள்ளிகளைப் பெற்று 15:12 புள்ளிகள் என்ற அடிப்படை யில் வெற்றி பெற்றுக்கொண்டது.

ஐந்து சுற்றுக்கள் கொண்ட இப்போட் டியில் ஆவரங்கால் இந்து விளையாட்டுக் கழகம் 3:2 சுற்றுக்கள் என்ற அடிப்படை யில் அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட் டுக் கழகத்தை வெற்றிகொண்டு மாவட்ட சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது. (1-86)

## விறுவிறுப்பான ஆட்டத்தில் றோயல் வி.க. வெற்றி

யாழ்ப்பாணம்,ஓக.8

புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழ கம் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் அரை இறுதி ஆட்டம் ஒன்றில் றோயல் வி.க. வெற்றிபெற்றது.

றோயல் வி.கவும் ஞானமுருகன் 'பி' அணியும் மோதிய இந்த ஆட்டம் இறுதி வரை மிகவும் விறுவிறுப்பாக அமைந்தது.

இறுதியில் றோயல் 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இப்போட்டிக்கு பிரதம மத்தியஸ்தராக ரி.கருணாகரன் பணியாற்றினார். அவருக்கு உதவியாக வி.திருஞானசம்பந்தன், கபி லன் ஆகியோர் கடமையாற்றினர். (1)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்



ஆட்டத்தின் விறுவிறுப்பான காட்சிகளில் இரண்டு இவை.

# ஏழு விக்கெட்டுகளால் ஸ்ரான்லியை வென்றது கொக்குவில் இந்துக் கல்லூரி

வலி.வடக்கு, ஓக.8

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 17 வய துப் பிரிவினர்களுக்கு இடையே நடத்தப் பட்டுவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் ஆட்டமொன்றில் கொக்குவில் இந்துக் கல்லூரி ஏழு விக்கெட்டுகளினால் வெற்றி பெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதா னத்தில் இடம்பெற்ற போட்டி ஆடட்த்தில் அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயமும் கொக்குவில் இந்துக் கல் லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கனரெத் தினம் மத்திய மகா வித்தியாலயம் 27.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களை யும் இழந்து 80 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இனோஜன் ஒரு ஆறு, இரண்டு நான்கு களுடன் 16, நில்டன்றோய் இரண்டு ஆறு களுடன் 16, சுவேந்திரன் ஒரு ஆறு, ஒரு நான்குடன் 14, தனஞ்செயன் மூன்று நான்கு களுடன் 14 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 15 ஓட்டங்களும் பெறப்பட்டன.

பவிராஜ் ஆறு ஓவர்கள் பந்துவீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 06 ஓட்டங்க ளுக்கு 04 விக்கெட் டுகளையும் நிரோஜன் 08 ஓவர்கள் பந்துவீசி 03 ஓட்டமற்ற ஓவர் களுடன் 16 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டு களையும் மற்றும் ஜனுதாஸ் 3.2 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 10 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் கபில்ராஜ் 02 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்ட மற்ற ஓவருடன் 07 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

81 ஓட்டங்கள் என்ற குறைந்த இலக்கு டன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாட களமி றங்கிய கொக்குவில் இந்துக் கல்லூரி 13.4 ஓவர்களில் 03 விக்கெட்டை இழந்து 83 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்துகொண்டது.

கோபிகன் ஒரு ஆறு, ஐந்து நான்குக ளுடன் 32, ஜனுதாஸ் ஆட்டமிழக்காது நான்கு நான்குகளுடன் 17 ஓட்டங்களை பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 15 ஓட்டங்களும் பெறப்பட்டன.

இனோஜன் 07 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 33 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார். (1-86)

# விளையாட்டுப் போட்டிகள்

குருநகர்,ஓக.8

குருநகர் சனசமூக நிலைய முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டுப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு குருநகர் கலையரங்க முன்றிலில் நடை பெறவுள்ளது.

யாழ்.பிரதேச செயலர் ஜெகூ மரியதா சன் பிரதம விருந்தினராகவும், யாழ்.புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை வண.பிதா ஆர்.எச்.சகாநாயகம் அடிகளார், குருநகர் சமூகசேவை அமைப்பின் தலைவர் ம.இம் மானுவேல், ஹரிதாஸ்-கியுடெக் முன்பள்ளி இணைப்பாளர் செல்வி பத்மேஸ்வரி மரிய ரெத்தினம் ஆகியோர் சிறப்பு விருந்தினர் களாகவும் கலந்துகொள்ள உள்ளனர். (1-51)

* * *

கட்டைவேலி,ஓக.8

அல்வாய், திக்கம் மத்திய சனசமூக நிலைய பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டு விழா சுறோம்படி வைரவர் ஆலய முன்றிலில் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு, நிலையத் தலைவர் க.சிவசோதி தலைமையில் நடை பெறவுள்ளது.

இவ்விழாவில் வடமராட்சி வலய உத விக் கல்விப்பணிப்பாளர் திருமதி ஐ. ராஜ சீலன் பிரமத விருந்தினராகக் கலந்துகொள் வார். (1-275)

# ஒலிம்பிக் நினைவுகள் 9

### 18ஆவது ஒலிம்பிக் (1964)

18ஆவது ஒலிம்பிக் போட்டி 1964 ஒக்ரோபர் 10முதல் 24 வரை ஜப்பானின் டோக்கியோவில் நடைபெற்றது. இதில் 93 நாடுகளில் இருந்து 4473 ஆடவர், 678 மகளிர் (மொத்தம் 5151 பேர்) பங்கேற்ற னர்.

இதில் 19 விளையாட்டுகளில் 163 பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றன. இனவெறியைக் கடைப்பி டித்ததன் காரண மாக தென்னா பிரிக்காவுக்கு இப்போட்டி யில் தடை விதிக்கப்பட்டது.

**29 ஆவது ஒலிம்பிக் திருவிழா இன்று கோலாகலமாக ஆரம்பம்**

ஜ ூ டோ, வொலி போல் மற்றும் மகளி ருக்கு பென் டத்லான் ஆகியன முதல்முறையாக இடம் பெற்றன.

சோவியத்யூனியனைச் சேர்ந்த ஜிம் னாஸ்டிக் வீராங்கனை லாரிஸா லாடினினா 2 தங்கம், ஒரு வெள்ளி, 2 வெண்கலம் வென்றார். குழுப்போட்டி மற்றும் தரைப் பயிற்சியில் தொடர்ந்து 3ஆவது முறை யாக தங்கம் வென்று அசத்தினார். ஒலிம் பிக்கில் மொத்தம் 9 தங்கம், 5 வெள்ளி, 4 வெண்கலம் வென்று வரலாற்றில் இடம் பெற்றார்.

நீச்சல் போட்டியில் அமெரிக்காவின் டான் ஷோலாண்டர் 4 தங்கம் வென்றார். அபேபே பிகிலா மரதன் ஓட்டத்தில் 2 முறை தங்கம் வென்ற முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

விளையாட்டு உலகில் அதிகம் பிரபல மடையாத அமெரிக்கவீரர் பில்லி மில்ஸ் 10000 மீற்றர் ஓட்டத்தில் தங்கம் வென்று அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார். 10,000 மீற்றர் ஓட்டத்தில் தங்கம் வென்ற ஒரே அமெரிக்க வீரர் அவர் தான் என்பது குறிப்பிடத் தக்கது.

ஓராண்டுக்கு முன் உருவான மலேஷியா முதல்முறை யாக ஒலிம்பிக் கில் பங்கேற்றி ருந்தமை குறிப்பிடத்தக்கது.

### 19ஆவது ஒலிம்பிக் (1968)

19ஆவது ஒலிம்பிக்போட்டி மெக்சிக்கோ நகரில் 1968 ஒக்ரோபர் 12 முதல் 27 வரை நடைபெற்றது.

112நாடுகளில் இருந்து 4750 ஆடவர், 780 மகளிர் (5530 பேர்) பங்கேற்றனர். 20 விளையாட்டுகளில் 172 பிரிவுகளில் போட் கள் நடைபெற்றன.

போட்டி தொடங்குவதற்கு 10 நாள்க ளுக்கு முன்னர் நடைபெற்ற கலவரத்தில் 100இற்கும் அதிகமான மாணவர்கள் பாது காப்புப் படையினரால் கொல்லப்பட்டனர்.

கடல்மட்டத்தில் இருந்து 2240 மீற்றர் உயரத்தில் மெக்சிக்கோ இருந்ததால் பல வீரர்கள் அந்த தட்பவெப்பநிலையில் மிக வும் சிரமப்பட்டனர். கிழக்கு மற்றும் மேற்கு ஜேர்மனி வீரர்கள் தனித்தனியாக முதல் முறையாகப் பங்கேற்றனர்.

நீளம் தாண்டுதலில் பாப் பீமோன் 8.90 மீற்றர் தாண்டி சாதனை படைத்தார். அப் போதைய உலக சாதனையைவிட இது 55 சென்ரிமீற்றர் அதிகம். 1991 இல் மைக்பாவெல் இச்சாத னையை முறியடித்தாலும் இது இன்றும் ஒலிம்பிக் சாத னையாகவே நீடித்து வருகி றது.

மும்முறை தாண்டுத லில் அப்போதைய உலகசாத னையை 3 வீரர்கள் 5முறை முறியடித்தனர். 200 மீற்றர் ஓட்டத்தில் பரிசளிப்பு நிகழ்ச் சியின்போது கறுப்பர்களின் வலிமையை உணர்த்த கறுப்பு 'கிளவுஸ்' அணிந்து கைமுட்டியை டோமி ஸ்மித் (தங்கம்), ஜான் கார்லோஸ் (வெண்கலம்) ஆகியோர் உயர்த்திக் காண்பித்தனர். இந்தச் செயலுக்காக அவர் களுக்கு வாழ்நாள் தடை விதிக்கப்பட்டது. ஊக்க மருந்துச் சோதனை அறி முகப்படுத்தப்பட்டது. சுவீ டனைச் சேர்ந்த பென்டத் லோன் வீரர் ஹான்ஸ் குனார் லில்ஜென்வால் போட்டிக்கு முன் அதிக மாக பியர் குடித்ததால் தகுதிநீக்கம் செய் யப்பட்டார்.

800மீற்றர் ஓட்டம் முதல் மரதன் வரை அனைத்து ஓட்டங்களிலும் ஆபிரிக்க வீரர்கள் பதக்கம் வென்று வருங்காலத் தில தாங்கள்தான் கோலோச்சவோம் என்பதை உலகுக்கு பறைசாற்றினர்.



*ஒலிம்பிக்கில் ஆடவர், மகளிருக்கான பீச் வொலிபோல் போட்டிகள் நடைபெறவுள்ள அரங்கம் இது. இதில், 12 ஆயிரம் பேர் அமர்ந்து போட்டிகளைக் காண முடியும்.*

*பீச் வொலிபோல் போட்டி 1992 ஆம் ஆண்டு பார்சிலோனாவில் நடந்த ஒலிம்பிக்கில் காட்சிப் போட்டியாக இடம்பெற்றது. அதற்கடுத்த அட்லாண்டா போட்டியில் அதிகாரபூர்வ விளையாட்டாக அறிமுகம் ஆனது. அப்போது ஆடவர் பிரிவில் அமெரிக்க குழுவும், மகளிர் பிரேசிலும் சாம்பியன் பட்டங்களைக் கைப்பற்றின. அதுமுதல் தொடர்ந்து ஒவ்வொரு ஒலிம்பிக்கிலும் இந்த விளையாட்டு இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகவியலாளர் ஒருவர் ஈரானில் தூக்கிலிடப்பட்டார்

தெஹ்ரான், ஓக.8

ஈரானில் ஊடகவியலாளர் யாகூப் மெஹ்ரினிஹேட் தூக்கிலிடப்பட்டார். தென் - கிழக்கு ஈரானில் தொடர் தாக்குதல்களை மேற்கொண்டு வந்த சுனி முஸ்லிம் தீவிரவாதக் குழுவுடன் தொடர்பு கொண்டிருந்தமைக்காக, இவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

ஊடகவியலாளர் யா கூப்பும், மரண தண்டனை விதிக்கப்பட்ட மற்றுமொரு நபரும், சிஸ்தான் - பலுசிஸ்தான் மாகாண தலைநகரான ஜாஹிடானில் திங்கட்கிழமை தூக்கிலிடப்பட்டார்கள் என நீதிபரிபாலன வட்டத்தைச் சேர்ந்த பேச்சாளர் அலி - ரிஷா ஜம்ஷிடி தெரிவித்தார்.

ஊடகவியலாளர் யா கூப் கடந்த ஆண்டு கைது செய்யப்பட்டார். வன்முறைகளில் ஈடுபட்டு வரும் சுனி தீவிரவாத அமைப்பான ஜூன் டல்லாவில் ஓர் உறுப்பினராக உள்ளார். அத்துடன் தேசிய பாதுகாப்புக்குக் குந்தகமான குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளார் என்று இவர் மீது இரு குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டன. (சி)


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்மகிழ 02 . 02 . 1977



கண் நெகிழ 08 . 08 . 2005

அமரர் தருமராசா சிவானந்தம்

தோள் கொடுத்த தோழா! நன்று செய்த நண்பா!
வாள் எடுத்தவர்கள் கொன்று சென்று போட்டனரோ?
ஆள் படையாய் நாமிருக்க - நீயொருவன்
பாழடைந்த பாதையிலே தனிவழியே போனாயோடா?

ஆருயிர் நண்பர்கள்,
இடைக்காடு.

(77011)



ஐயப்பா சரணம்

## 08 . 08 . 2008 பிறந்ததின வாழ்த்து



கி.பிருந்தாவன்

ஆடிச் சுவாதி திருநாளில் இன்று ஆராதனையோடு ஏழாவது பிறந்த நாளைக் கொண்டாடும் செல்வன் கி.பிருந்தாவன் 08.08.2008

சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த ஸ்ரீ ஸ்ரீமதி தி.கிருஸ்ணமூர்த்திக் குருக்கள் தம்பதியரின் ஏக புதல்வன் கி.பிருந்தாவனை 7 ஆவது பிறந்தநாளில் அப்பா, அம்மா, அப்பம்மா,பெரியப்பாமார், பெரியம்மாமார், அராலி ராசாத்தி அத்தை, அத்தை மாமா, மச்சான்மார், ஹற்றன் சித்தப்பா, சித்தி, அனுசாக்கா, முனீஸ்வரம் அபிரா அக்கா, அத்தான், யாழ். ரவி மாமா, மாமி மச்சான்மார், சுதுமலை ஜெயா மாமா, மாமி, மச்சான், மச்சாள், பொலி கண்டித் தீபன் மாமா, கல்வயல் இராசன் மாமா குடும்பத்தினர் நுணாவில் வீரபத்திரர், மட்டுவில் கண்ண பகவான், சங்கத்தானை முருகன் அருளால் சகல கலைகளும் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றார்கள்.

*D.குருராஜ்,*
*விவசாயக் கல்லூரி மாணவன்,*
*வவுனியா.*


## வேலணை கூட்டுறவு நகரில் சீனி, சர்க்கரைப் பற்றாக்குறை

குருநகர், ஓக.8

வேலணை கூட்டுறவுநகர் விற்பனை நிலையத்தில் சீனி, சர்க்கரை ஆகியவைகளுக்கு பற்றாக்குறை நிலவி வருகிறது.

இங்கு இப்பொருள்கள் கையிருப்பில் போதியளவில் இல்லை என விற்பனை முகாமையாளரால் தெரிவிக்கப்பட்டது.

அரிசி, மா போதியளவு இங்கு விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(202-51)


## First Year Death Anniversary



**Mrs. Saroja Kandasamy**

*(Retired Teacher, Uduvil)*

08.06.1945

21.07.2007

May Gracious God Bless you in the Eternity to perform a tranquil rest fondly Remembered for ever.

Uduvil. (76900) Husband.



**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 0212228250, 0777222422

ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

*Diploma in Hardware Engineering*
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking
Course Fee : 2000/=

*Diploma in Video Editing*
முன்னணி Video Mixing Software களூடாக
❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter ❖ Capturing
Course Fee : 3000/=

*Diploma in Graphic Designing*
❖ Adobe Photoshop ❖ Corel DRAW ❖ Cool3D Studio ❖ Micro Media Flash
Course Fee : 2000/=

பிரபல கணணிக்கணக்கியல் மென்பொருள்.........
Tally செய்முறைப்பயிற்சிகளுடன் கம்பனிகணக்குகளையும் உள்ளடக்கி..

வகுப்புக்கள் ஆரம்பம் :11/08/2008 09.00AM



**IBMS இன் கணனிக்கற்கை நெறிகள்**

பாடசாலை மாணவர்களே உங்கள் விடுமுறைக்காலத்தில் IBMS உடன் இணைந்து தகவல் தொழில்நுட்ப உலகில் உங்களை இணைந்து கொள்ளுங்கள்.

அனைத்து Diploma கற்கை நெறிகளுக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பம்.

ஆரம்பம்:- 08/08/2008, 09/08/2008 பகல் 10.00மணி

பெற்றோர்களே!!!
குறைந்த கட்டணத்தில் சர்வதேச அங்கீகாரம் வாய்ந்த கணனிக்கற்கை நெறிகளை வழங்கிவரும் IBMS நிறுவனத்தில் உங்கள் பிள்ளைகளை இணைத்துக்கொள்வதன்மூலம் அவர்கள் வாழ்விற்கு சிறந்த அடித்தளத்தினை இட்டுக்கொள்ளுங்கள்.

குறைந்த கட்டணத்தில் சர்வதேச அங்கீகாரம் வாய்ந்த கணனிக்கற்கை நெறிகள்.

INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES
T.P 021 222 8432



## விற்பனைக்கு

6:2, 4:3, 4:2 பழைய தீராந்திகள், 4:3 முதிரை, 4 அடிக்கு உட்பட்ட புதிய தீராந்திகள், தேக்கம் பலகை, 4 அடிக்கு உட்பட்ட வேம்பு, பலா பலகைகள் மற்றும் நல்ல இன ஆடும் குட்டிகளும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: சே.கிருஷ்ணகுமார்,
விதானை வளவு, பொன்னாலை வீதி, மானிப்பாய்.
T.P.: 021 222 7802



## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



*மலர்வு: 17.04.1907*

*உதிர்வு: 07.08.2004*

*திதி: ஷப்தமி (08.08.2008)*

**திருமதி வீரவாகு தில்லைவனம்**

வருடங்கள் நாலு ஓடி மறைந்தபோதும் அம்மா நீங்கள் எம்மைவிட்டு மறைந்தாலும் எமது இதயங்களில் என்றும் எம்முடன்தான் இருக்கின்றீர்கள். பிறப்பு, இறப்பு வாழ்வின் நியதி என்றாலும் எங்கள் நினைவுகளில் என்றும் நீங்கள் வாழ்வீர்கள். உங்கள் ஆத்மா சாந்தி பெற நாம் யாவரும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்:
தாவடி தெற்கு, கொக்குவில். (76896) குடும்பத்தினர்



## நீங்காத நினைவலைகள்

22ஆம் ஆண்டு



அமரர் சோமசுந்தரம் சோதிநாதன்
மலர்வு: 04.01.1926
உதிர்வு: 10.06.1986

2ஆம் ஆண்டு



அமரர் சோதிநாதன் கமலாம்பிகை
மலர்வு: 26.12.1928
உதிர்வு: 01.08.2006

திதி:ஸப்தமி 08.08.2008

அன்பு செய்தீர்! அரவணைத்தீர்! இன்பமாய் நாம் வாழ நீர் உழைத்தீர்!
கல்வி தந்தீர்! செல்வம் தந்தீர்! கடின உழைப்பிற்கு வழி சொன்னீர்!
ஒன்றல்ல இரண்டல்ல எத்தனை ஆண்டுகள் தான் சென்றாலும்
மறக்குமா உம் நினைவு. சென்ற உங்கள் ஆன்மா இளைப்பாற
என்றுமே இறைஞ்சிடுவோம் இறைவனை நாம்.

*352,கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (77017)

குடும்பத்தினர்.



## எமது அன்பான வாடிக்கையாளர்களுக்கு..!

Bata புதிய வரவுகள்

எம்மிடம் மாணவர்,
உத்தியோகத்தர், வாலிபர்,
இளம்பெண்கள்,
சிறுபிள்ளைகளுக்கான அழகாக
வடிவமைக்கப்பட்ட

⇨சப்பாத்துக்கள் ⇨பிளற்போம் ⇨பாதணிகள்,
⇨ஹீல்ஸ் ⇨லெதர் பாதணிகள்
⇨நவீன ரபர் பாட்டாக்கள் ⇨ஆரோக்கிய ரபர் பாட்டாக்கள்

என்பன உடன் பெற்றுக்கொள்ளலாம்.

**லக்ஷ்மி ஒகனைசேஷன்**

*(வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்)*

இல.25, 4 ஆம் லேன், பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(எமது இடம் பிறவுண் வீதியில் உள்ள மின்சார நிலைய காரியாலயத்திற்கும் கலட்டிச்சந்திக்கும் இடையில் அமைந்துள்ளது)

(சீ/554011)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசைக்கு ஓர் அளவில்லை

உலகம் எல்லாம் கட்டி அரசாளவேண்டும். தொட்டது எல்லாம் தங்கமாக வேண்டும். கடல்மீது கூட நம் கட்டளை செல்லவேண்டும். விண்ணும், மண்ணும் நமதாக வேண்டும் என்று நினைத்து, ஒரு கட்டுக்கடங்காமல், கங்குகரை இல்லாமல் தலைவிரித்து ஆடுகின்ற அசுரதாண்டவமே பேராசை.

கடும் கோடைவெயில், ஒருவன் குடையும் செருப்பும் இல்லாமல், நடந்து போய்க்கொண்டிருந்தான். அந்த வழியில் ஒருவன் பாதரட்சை அணிந்துகொண்டு, குடையும் பிடித்துக்கொண்டு குதிரை மேல் சென்றான். அவனைப் பார்த்து நடந்து போனவன் ''ஐயா! வணக்கம் குதிரைமேல் போகின்ற உங்களுக்குப் பாதரட்சை (செருப்பு) எதற்காக? எனக்குத் தந்தால், பெரும் புண்ணியமாகுமே'' என்றான். கேட்டவன் வாய்மூடுவதற்கு முன் குதிரை மீது போனவன் பாதரட்சையைத் தந்தான்.

''ஐயா! குதிரையில் செல்வதனால் நீங்கள் சீக்கிரம் வீட்டுக்குப் போய்விடலாம். தயவுசெய்து தங்கள் குடையைத் தாருங்கள்'' என்றான். குதிரைமேல் போகின்றவன் சிறிதுகூட சிந்தனை செய்யாமல் இரக்கத்தோடு குடையைக் கொடையாகக் கொடுத்தான். நடந்து போனவனுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. ''ஐயா! தங்கள் தரும் குணம் பாராட்டுதலுக்குரியது. ரொம்ப நன்றி. கருணை புரிந்து குதிரையைத் தாருங்கள்'' என்றான். குதிரைமேல் இருந்தவன் 'அப்படியா' என்று சொல்லி, 'பளிச்' சென்று இறங்கிக் குதிரையை அடிக்கும் சவுக்கினால் அவனைப் பளீர் பளிர் என்று அடித்தான். அடிபட்டவன் சிரித்தான். ''நான் அடிக்கிறேன். நீயோ சிரிக்கிறாயே. என்ன காரணம்?'' என்று குதிரையில் வந்தவன் கேட்டான்.

''இப்படிக் கேட்டு நான் அடிபடவில்லையானால், என் ஆயுள் உள்ளவரை என் மனதில் ஒரே கொந்தளிப்பாக இருந்து இருக்கும். செருப்பைக் கேட்டவுடன் தந்தார். குடையைக் கேட்டவுடன் தந்தார். குதிரையையும் கேட்டிருந்தால் கொடுத்திருப்பார். கேட்காமல் போய்விட்டோமே என்று எண்ணி எண்ணி வருந்துவேன். இப்போது கேட்டேன். நீங்கள் குதிரையைக் கொடுக்காமல் சவுக்கடி கொடுத்தீர்கள். சவுக்கடி பட்டது பெரிதில்லை என் சந்தேகம் தீர்ந்ததே அது தான் பெரிது'' என்று சொல்லி விட்டு அவனை வணங்கிச் சென்றான். இதற்குத் தான் பேராசை என்று பெயர்.

ஞானக்கதிர்

# வரலட்சுமி விரத பூசைகள் எதிர்வரும் 15ஆம் திகதி

யாழ்ப்பாணம்,ஓக.8

வரலட்சுமி விரத பூசைகள் எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆலயங்களில் இடம் பெறவுள்ளன.

வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு வரலட்சுமி பூசைகள் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளன.

மகாலட்சுமி அம்பாளுக்கு நவகலச அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி முற்பகல் 10.30 மணிக்கு விசேட தீபாராதனை, அர்ச்சனை, வழிபாடுகள் என்பன இடம்பெறும்.

தொடர்ந்து பத்மாசனத்தில் மகாலட்சுமி அம்பாள் திருவீதியுலா வருதலும் நோன்பு நூல் வழங்கலும் இடம்பெறும்.

நோன்பு நூல் பெற விரும்பும் அடியார்களை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் ஆலய அலுவலகத்தில் பதிவு செய்யுமாறு கூறப்பட்டுள்ளது.

* * *

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை வரலட்சுமி விரத நூல் கட்டுதல் இடம்பெறும். (203)



அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்தத் தேர்த்திருவிழாவின் போது எடுக்கப்பட்ட படம்



வட்டுக்கோட்டை - தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத் தேர்த்திருவிழாவின்போது...

## சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை

யாழ்ப்பாணம்,ஓக.8

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் ஊர்காவற்றுறை தம்பாட்டி முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் இன்று முற்பகல் 10 மணிக்கு சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நிகழ்வு நடத்தப் படவுள்ளது.

அபிவிருத்தி உதவியாளர் எஸ். உதயபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் கே.ஸ்ரீமோகனன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (203)

★ ★ ★

வழக்கம்பரை சுழிபுரத்திலுள்ள சிவபூமி முதியோர் இல்லத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நடைபெறும்.

இந்நிகழ்வில் செஞ்சொற் செல்வர் திரு.ஆறு.திருமுருகனின் சொற்பொழிவும் வட்டு.இந்துக் கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (202)

★ ★ ★

வண்ணை சாந்தையர் மடம் கற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக் கழகம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்குச் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசைநிகழ்வை நடத்தவுள்ளது.

அபிஷேகம், மாலைப் பூசை, அகில இலங்கை திருமுறை மன்றத்தின் கூட்டுப்பிரார்த்தனை என்பன இடம்பெற்று சுந்தரமூர்த்தி நாயனாரின் வீதியுலாவும் இடம் பெறும். (203)

★ ★ ★

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை பகல் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசையும் ஆடிச் சோதி விழாவும் இடம்பெறவுள்ளன. (203-86)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் ஆன்மீக நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று பிற்பகல் 3 மணிக்கு 'இந்துசமய வளர்ச்சியில் மகளிர்' என்னும் தலைப்பில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் சொற்பொழிவாற்றுவார். அராலி கோகுலம் அறநெறிப் பாடசாலை, சோமாதா அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறும். (203)






## நல்லூர் பெருந்திருவிழா பக்திப்பாக்கள்



காண்பானும் காட்சியும்போய்க் - கிளியே
கண்டபல பொருளும்விட்டு
மாண்பாகச் சிந்தையிலே - கிளியே
வடிவேலைப் போற்றிடடி
- யோகர் சுவாமி

### அமைதியே அளிப்பாய் முருகா!

வெற்றியே காண்கின்ற வேலுடைய வீரனே!
வளநகர் நல்லையில் வீற்றிருக்கும் பாலனே!
பற்றினோம் உன்திருப் பாதமே கந்தனே!
பரிவுடன் எம்மைநீ காத்தருள் குமரனே!
உற்றதாம் இடரெலாம் நீக்குவாய் ஐயனே!
உதவிக்கு உன்னையே நம்பினோம் சரவணா!
முற்றுமே அறிபவன் நீயன்றோ சண்முகா!
மண்ணிலே அமைதியே அளித்திடு முருகனே!
நாயன்மார்க்கட்டு ப.மகேந்திரதாசன்.

### குறைநீக்கி ஆண்டருள்வீரே!

குக்குடக் கொடியொரு வேலேந்தி மயில்மீது
இவர்கின்ற நல்லூர் கந்தா
குருவாகிப் பிரணவம் காதிலே ஓதிய
குமரகுருவான பரனே!
குவலயம் வலம்வந்து கலகநிலை யதுவென்ற
உயர்ஞானப் பழனிநாதா!
குறவர்குலம் விளங்கவரு வள்ளியின் கந்தனே!
குறைநீக்கி ஆண்டருள் வீரே.
கவிமணி கந்தமுருகேசதாசனார்.

### நல்லைக் கந்தனே நம்மைக் காத்தருள்வாய்

நல்லைக் கந்தனே நம்மைக் காத்தருள்வாய்
நாடும் படுந்துயர் தீர்த்து நமக்கருவாய்
வேலைக் கையிலேந்தி வினையறுப்பாய்
வேண்டும் வரம் தந்து எமைக் காப்பாய்
தாளைப் பற்றி தொழுகின்றோம் வேலவனே
தரணிதனை வாழ்விக்க வழியருள்வாய்
வேளை முழுதும் உனை வணங்குகின்றோம் முருகா
விடிவு தந்தே எம்மைக் காத்தருள்வாய்.
ஏ.சங்குநாதன், திருநெல்வேலி.

### நல்லையில் உறையும் ஆறுமுகனே......

சரவணப் பொய்கையில் உதித்தவன்
சங்கரன் மகனாய் அவதரித்தவன்
குறமகள் வள்ளியை வென்றவன்
அவள் தமிழினிமை கேட்டவன்
பருவதப் பழனியில் அமர்ந்தவன்
கார்த்திகைப் பெண்களால் வளர்ந்தவன்
வருவினை யாவையும் தீர்ப்பவன்
நல்லை ஆறுமுகன் அருள்நிதி சேர்ப்பவன்.
கா.கார்த்திகேசு, நல்லூர்.

### நிம்மதி தந்தான் நல்லூர்க் கந்தன்

வேங்கை மரமாகி நின்ற வேலவரைக் காண
வேகமாய்வந்தேன் நல்லூர்ப் பதியினுக்கு
பாங்காக வள்ளி தெய்வயானையுடன்
காட்சி தந்தான், பரவசமாகி நின்று
காங்கேயா கதிர்வேலா கருணாகரா வென்று
கதறி கந்தன் காலடியில் சரணடைந்தேன்
நீங்காத கவலையெல்லாம் நீங்கிடவே
நிம்மதி பிறந்தது என் மனதினிலே
எம்.இந்திராணி, ஏழாலை.

### சமாதான முருகா! சிவகுருவே எமைக்காப்பாய்!

உதயஞாயிற்றின் உன்ஒளிபோல் அண்டமெங்கும் பேரொளியானே
இதயக்கோயிலில் உள்ளிருப்போனே ஆதிகுருவாய் எமைக் காப்போனே
பதபதைக்கும் பக்தர்களின் பாவநாசகனே வேலவனே
புவிஉலகின் காவல் தெய்வமே பரவசந்துரு சங்காரவேலனே
விதவிதமான வடிவமாயையின் வல்வினை சூரனை வதைத்தகந்தா
வேதனை தாங்கா மக்களின் துயர் விலக்கிடும் தீர்வுதருவாயே
அதர்மம் அழித்திடுவாய் தர்மநீதி காத்திடுவாய்
அனைத்துயிர் காப்போனே எமைக்காப்பாயே சமாதான முருகா!
என்.தமிழ்மகன்.

ஊர்வீதி யாலே உடம்பால் உருண்டுதலஞ்
சேர்கின்ற பக்தர் செயலுக்குத் - தீர்வாகப்
பேறருளி நல்லூர்ப் பெருமான் அவர்க்குற்ற
ஊறகற்று வாரென் றுணர்.
- இறைமணி சி.இராசரத்தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுணர்வுடன் விளங்கியவர் தம்பிரான் தோழர் சுந்தரமூர்த்தி நாயனார்

வரலாற்றுணர்வுடன் எந்தவொரு விடயத்தையும் ஆவணப்படுத்துவது காலத்தின் தேவையாகும். சைவ சமய குரவர்களுள் இதனை உணர்ந்து செயற்பட்டவராக சுந்தரமூர்த்தி நாயனாரைக் கொள்ளலாம். இப்படிக் குறிப்பிடுவதற்கான காரணம் என்ன? என்ற வினா எழுவது இயல்பானது.

சுந்தரர் தேவாரத்தில் திருத்தொண்டர் தொகை என்ற பதிகம் இருக்கிறது. சிவனடியார்களாகிய நாயன்மார்களுடைய பெருமைகளை இன்றும் பாராட்டி, நாம் உய்யும் வழி காண்பதற்கு இப்பதிகம் அடிநாதமாக அமைந்திருக்கிறது. சைவ நாயன்மார்களுடைய எண்ணிக்கை அறுபத்து மூன்று என வரையறுப்பதற்கு திருத்தொண்டர் தொகையே மூலகாரணம்.

திருத்தொண்டர் தொகையை விரித்து நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதி பாட, அதனை இன்னும் வீரித்த சேக்கிழார் பெரிய புராணம் என்ற அழகு தமிழ்க் காப்பியத்தைத் தந்தார். பெரிய புராணத்தின் அடிப்படையில் நாயன்மார்கள் அறுபத்து மூவர் எனக் கொள்ளப்படுகின்றனர்.



சுந்தரமூர்த்தி நாயனார் ஒவ்வொரு பதிகத்தின் இறுதிப் பாடலிலும் தம்முடைய பெயரை இணைத்துப் பாடியுள்ளார். இதுவும் இவரது ஆவணப்படுத்தல் உணர்வை வெளிக்காட்டுகிறது.

இன்ன காரணத்தால் இப்பதிகம் பாடப்படுகிறது என்ற குறிப்பை அமைத்துப்பாடுவது இவர் வழக்கமாகும்.

சுந்தரமூர்த்தி நாயனார், திருக்கைலாயத்தில் சிவபெருமானின் பிரதி பிம்பத்தினின் ...ன்றி அப்பெ... ...னுடைய திருத்தொண்டைப் புரிந்து வந்த ஆலால சுந்தருடைய அவதாரம் என்று, பெரிய புராணம் குறிக்கிறது. சுந்தரர் என்ற திருப்பெயர் இதன் காரணமாகவே ஏற்பட்டிருக்க வேண்டும். இவருக்குத் தாய், தந்தையர் இட்ட பெயர் ஆரூரன் என்பதாகும். அந்தப் பெயரையே இவர் பெரும்பாலான பாடல்களில் பயன்படுத்துகின்றார்.

" ஆரூரன் எம் பெருமாற்கு அனல்லே
னெனலாமே"

ஆரூரன் அருந்தமிழைந்தினோ டைந்தழ
காலுரைப் பார்களுங் கேட்பவரும்
சீரும் தருதேவர் கணங்களொடும்
இணங்கிச் சிவலோகம் எய்துவரே

ஆயினும் ஆரூரன் என்ற பெயரைக் குறுக்கி ஊரன் எனவும் கொண்டுள்ளார்.

சித்தர் சித்தம் வைத்தபுகழ்ச்
சிறுவ னூரன் ஒண்தமிழ்கள்
பத்தும் பாடி ஆடுவர் பரமன் அடியே
பணிவாரே

### இறைவனால் தடுத்தாட்கொண்டபோது

இறைவன் கிழவேதியர் வடிவோடு தடுத்தாட் கொள்ள வந்தபோது வன்மை பேசியமையால் வன்றொண்டன் என்ற பெயரைப் பெற்றார். இதனால் பாடல் இறுதியில் குறிக்கும் போது தன் பெயரை

"வன்றொண்ட ஆரூரன் உரைத்த
தமிழ்"

எனவும் குறித்துள்ளார்.

இறைவனுடன் தோழமை நெறி நின்று வாழ்ந்து காட்டினார். இதனைச் சக மார்க்கம் எனக் கூறுவர். இதனால் தம்பிரான் தோழர் என்ற பெயரும் இவருக்கு உண்டு.

ஆதி சைவர் குலத்தில் பிறந்தமையால் நம்பி என்ற பெயருக்கு உரித்துடையவர் ஆனார்.

ஆயர் என்ற சொல் இடையரைக் குறிக்கிறது. இறைவனை ஆயராகக் கருதி நம்மை மந்தைகளாகக் கருதிய செல்நெறியின் உபயகாரனாகச் சுந்தரரே விளங்குகின்றார்.

"ஆயாவுனக் கானாய் இனி அல்லே
னெனலாமே"

சைவத் திருமுறைகளில் சுந்தரருடைய பாடல்கள் ஏழாம் திருமுறையாக அமைந்து 100 பதிகங்களைக் கொண்டுள்ளன. சுந்த

## இன்று குருபூசை தினம்

ர... பாடியவை முப்பத்தெண்ணாயிரம் பதிகங் ...ள் என்றும் அவற்றில் கறையான் அரித்தவை போக எஞ்சியவை நூறு பதிகங்களே என்றும் திருமுறை கண்ட புராணத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

சுந்தரமூர்த்தி நாயனார் கொண்டிருந்த வரலாற்றுணர்வு நம்மை வியக்க வைக்கிறது.

ச.லலீசன்.

# பெரஹரா நிகழ்வுகளை ஒட்டி கண்டி நகரம் எழிற்கோலம்!

## பாதுகாப்பு ஏற்பாடுகளும் விஸ்தரிப்பு

கண்டி, ஓக. 08

கண்டிப் பெரஹராவை முன்னிட்டு தலதா மாளிகை உட்பட கண்டி நகரம் முழுவதுமே எழில் கோலம் பூண்டுள்ளது.

தலதா மாளிகை மற்றும் ஏனைய நான்கு தேவாலயங்களில் கடந்த இரண்டாம் திகதி சம்பிரதாயபூர்வ காப்புக் கட்டலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்று வருகின்றன. முதலாவது கும்பல் பெரஹரா நேற்று புதன்கிழமை ஆரம்பமாகியது. எதிர்வரும் 17 ஆம் திகதி வரை இடம்பெறும். 'ரந்தோலி' என்ற பெரிய பெரஹரா நிகழ்வுகள் எதிர்வரும் 12ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை இடம்பெறவிருக்கின்றன.

இந்த பெரஹராவைக் கண்டுகளிப்பதற்கென பலலட்சம் பேர் உள்ளூர் மற்றும் வெளிநாடுகளில் இருந்து கண்டி நகருக்கு வருவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கண்டி நகரில் தலதா மாளிகைக்குச் செல்லும் வீதிகள் உட்பட முக்கிய வீதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆங்காங்கே சோதனை நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன. விசேட பாதுகாப்புக் கடமையில் 8 ஆயிரம் பொலிஸாரும் இராணுவத்தினரும் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# செப். 8இல் அமெ. நாடாளுமன்றில் இந்தியாவுடனான அணுசக்தி ஒப்பந்தம் தாக்கல்

வாஷிங்ரன், ஓக.8

அமெரிக்க நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறுவதற்காக அடுத்த மாதம் 8ஆம் திகதி அணுசக்தி ஒப்பந்தம் தாக்கல் செய்யப்படும் என அந்நாட்டு வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் கோன்சலோ கோன்சலஸ் தெரிவித்தார்.

வியட்னாமில் இம்மாதம் கூட இருக்கும் அணு எரிபொருள் வழங்கும் நாடுகள் குழுவில், இந்தியாவுடன் அணுவர்த்தகம் செய்வதற்குத் தேவையான 'விலக்கு' பெற தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். அணுசக்தி ஒப்பந்தத்தால் இருதரப்பு உறவுகள் மேம்படுவது மட்டுமன்றி, உலகம் முழுமைக்குமே எரிசக்தி பாதுகாப்பு கிடைக்கும் என்றார் அவர்.

செப்ரெம்பர் 26 ஆம் திகதி நாடாளுமன்றக் கூட்டத்தொடர் முடிவதற்கு முன்பாக அணுசக்தி ஒப்பந்தத்துக்கு ஒப்புதல் கிடைத்து விடுமா என அவரிடம் கேட்கப்பட்டது.

அதற்கு, 'ஒப்புதல் கிடைத்து விடும் என்ற நம்பிக்கையுடன் செயற்பட்டு வருகிறோம்' என்று பதிலளித்தார் கோன்சலஸ்.

இதற்கிடையே, அமெரிக்க நாடாளுமன்ற பிரதிநிதிகள் அவைத் தலைவர் நான்சி பெலோசி கூறுகையில், "செப்ரெம்பர் 26ஆம் திகதி அவையை ஒத்திவைப்பது என்ற முடிவில் உறுதியாக இருக்கின்றோம். செனட் அவையும் அதேநாள் ஒத்திவைக்கப்படலாம்" - என்றார்.

நவம்பர் 4இல் அதிபர் தேர்தல் முடிந்த பிறகு அடுத்த அதிபர் பதவி ஏற்பதற்கு முன்பாக நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கான வாய்ப்பில்லை என பெலோசி சூசகமாகக் கூறினார். (சி)

# இல்லறம் சிறப்புற்றால் நீண்ட ஆயுள் அமையுமாம்

## ஆஸி. ஆய்வில் தகவல்

சிட்னி, ஓக.8

திருமணம் செய்து கணவன், மனைவியாக அன்புடன் வாழ்பவர்கள் நீண்ட ஆயுளுடன் இருப்பார்கள் என்று ஆஸ்திரேலியாவில் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

ஜப்பானியர்களுக்கு அடுத்தபடியாக நீண்ட ஆயுளைக் கொண்டவர்கள் ஆஸ்திரேலியர்கள். ஆஸ்திரேலிய ஆண்கள் சராசரியாக 79 வயது வரை உயிர் வாழ்கின்றனர். பெண்களின் சராசரி வயது 84.

ஆனால், சராசரியைத் தாண்டி வாழும் ஆஸ்திரேலியர்கள் பலர் உள்ளனர். இதற்கான காரணம் என்ன என்பது குறித்து ஆஸ்திரேலிய அரசின் புள்ளியியல் துறை ஆய்வு நடத்தியது.

85 வயதுக்கு மேல் வாழ்பவர்களின் கணக்கை எடுத்தபோது அவர்களில் பெரும்பாலானவர்கள் திருமணம் ஆகித் தங்கள் ஜோடியுடன் வசிப்பவர்கள் என்று தெரிய வந்தது. வயதானவர்களில் கணவனோ மனைவியோ இதில் யாராவது ஒருவர் இறந்ததும் அடுத்த ஓராண்டுகளுள் மற்றவரும் இறந்து விடுவது ஆய்வில் தெரியவந்துள்ளது.

இது குறித்து ஆராய்ச்சியாளர் மார்க் மெக்கிரின்டில் கூறுகையில்,

"வயதான காலத்தில் துணை அவசியம். அந்தத் துணை, மனைவியாகவோ அல்லது கணவனாகவோ இருக்கும்போது வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படுகிறது. ஒருவருக்கு ஒருவர் உதவிக் கொள்வார்கள். இதனால் அவர்களது ஆயு... ...கிறது. ... துணை இறந்ததும் தனிமையில் வாடுபவர்கள் இறந்து வி... ...என்றார்.

# நோபல் பரிசு பெற்ற ரஷ்ய எழுத்தாளரான அலெக்சாந்தர் சோல் செனிட்சன் காலமானார்

மொஸ்கோ, ஓக.8

நோபல் பரிசு பெற்ற எழுத்தாளரும், தமது நாவல் மூலமாக ஸ்டாலின் காலத்து, சோவியத் யூனியனின் 'குலாக்' சிறையை வெளியுலகுக்கு அம்பலப்படுத்தியவருமான அலெக்சாந்தர் சோல் செனிட்சன் மாரடைப்பால் ஞாயிற்றுக்கிழமை காலமானார். இறக்கும்போது அவருக்கு வயது 89.

சோல் செனிட்சன் இரண்டாம் உலகப் போரின் போது, இராணுவக் கொமாண்டராகப் பணிபுரிந்தவர். இவர் தமது நண்பருக்கு எழுதிய கடிதமொன்றில் அப்போதைய ...வாதிகாரி ஸ்டாலினைப் பற்றி தரக்குறைவாகக் குறிப்பிட்டிருந்தார். இதற்காக சோல் செனிட்சன் கைது செய்யப்பட்டார். அத்துடன், சோவியத் யூனியனுக்கு எதிராகச் செயல்பட்டுள்ளார் என இவருக்கெதிராக, குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டது. இவற்றிற்காக எட்டாண்டு காலம் சிறையில் அடைக்கப்பட்டார்.

அவர் தாம் எழுதிய நூலொன்றில் குலாக் சிறைக்கூட சீர்கேடுகளைப் பகிரங்கப்படுத்தியிருந்தார். சர்ச்சைக்குரிய இந்நூலுக்கு 1970 ஆம் ஆண்டில் நோபல் பரிசு கிடைத்தது. அதற்குப் பின்னர் 1974 இல், இவர் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டார். அவரால் எழுதப்பட்ட இதர நூல்களுக்கும் தடைவிதிக்கப்பட்டது.

சோவியத் யூனியனில் 1989 ஆம் ஆண்டில், சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அப்போது, சோல் செனிட்சனுக்கு எதிரான தடைகளும் நீக்கப்பட்டன. சோவியத் யூனியன் சிதறுண்ட பின்ன... இவர் நாடு திரும்பினார்.

சோல் செனிட்சனின் மனைவி நடால்யா அவருடனான வாழ்வு பற்றிக் கூறுகையில்,

"எனது கணவருடனான வாழ்க்கை கடினமாக இருந்தது. சோதனைகள் நிறைந்தவையாக இருந்தது. எனினும் பாசமும் மகிழ்ச்சியும் எங்களை விட்டு நீங்கி விடவில்லை" - எனக் குறிப்பிட்டுள்ளார்.

சோல் செனிட்சனின் மறைவுக்கு உலகப் பிரமுகர்களும், மேதைகளும், இவரது படைப்புகளால் ஈர்க்கப்பட்ட ஆர்வலர்களும் தம் இரங்கலைத் தெரிவித்து வருகிறார்கள். (சி)

# தொழிற்பயிற்சி மையம் திங்களன்று திறப்பு

யாழ்ப்பாணம், ஓக.8

சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்டத்திற்குட்பட்ட தெல்லிப்பழை, மல்லாம் லயன்ஸ் கழகத்தினரின் 'தொழிற் பயிற்சி மையத் திறப்பு விழா எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு லயன். ஆர்.கதிர்காமநாதர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட ஆளுநர் (2007/2008) லயன். எஸ். ராகவனும், முதன்மை விருந்தினராக மாவட்ட ஆளுநரின் கௌரவ ஆலோசகர் லயன்.சுக். விஜேந்தனும், சிறப்பு விருந்தினர்களாக வடக்கின் பிரதி நிர்வாகச் செயலாளர் லயன் எஸ்.சிவராஜேஸ்வரனும், வடக்கின் பிரதி நிர்வாகப் பொருளாளர் லயன் எஸ்.எஸ். தங்கராஜாவும், லயன்ஸ் கழகங்களின் செயற்றிட்டங்களுக்கான பிராந்தியக் குழுத் தலைவர் லயன்.டி. ஸ்ரீபன் லெனார்ட்டும், 7ஆவது பிராந்தியத் தலைவர் லயன் சீ.சுந்தரேஸ்வரனும், 14ஆவது வலயத்தின் தலைவர் லயன்.சிறீவிமலேஸ்வரனும் கலந்து கொள்ளவுள்ளனர். (04)



அமெரிக்காவை சேர்ந்த பெண் ஒருவர் செல்லமாக வளர்த்த நாய் அண்மையில் இறந்தது. அதேபோன்ற நாய் வேண்டும் என்று அந்தப் பெண் ஆசைப்பட்டார். இதனால், செல்ல நாயின் உடலில் இருந்து எடுக்கப்பட்ட கலங்களைப் பயன்படுத்தி தென்கொரிய விஞ்ஞானிகள் குளோனிங் முறையில் 5 குட்டிகளை உருவாக்கினர். ...முறையில் பிறந்த நாய் குட்டிகளுக்கு அவற்றை ஈன்ற நாய் பாலூட்டும் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# கேவல ஆட்சியிலிருந்து மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்

இந்த நாட்டில் ஆட்சித் துறையால் அரங்கேற்றப்படும் அராஜகங்கள், அத்துமீறல்கள், அடாவடித்தனங்கள் எல்லாம் எல்லை தாண்டி விட்டன. அவற்றுக்கான தண்டனைக்கு - நியாயத்துக்கு - நாட்டு மக்கள் இறைவனிடம்தான் இறைஞ்சவேண்டும் போல உள்ளது.

அப்படித்தான் மக்களை வழிப்படுத்தும் நிலைக்கு - வழிகாட்டும் கட்டத்துக்கு - ஆட்சிப் பீடத்தின் முக்கிய பங்காளியான அமைச்சர்களே தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

பட்டப்பகலில் பலரும் பார்த்திருக்க, அரசின் ஊடகத்துக்குள்ளேயே ஓர் அமைச்சர் குண்டர் குழுவுடன் புகுந்து காட்டுத் தர்பார் பண்ணுகின்றார்; அராஜகம் புரிகின்றார். அந்த அட்டூழியங்களை அடுத்துக் கட்டவிழ்ந்த 'கேவலங்கள்' அரச தொலைக்காட்சி ஊடகத்திலேயே நேரடியாக ஒளிபரப்பாகின்றன. இவ்வளவுக்கும் பின்னரும் இந்தக் கோணங்கித்தனத்தை ஒட்டி சட்ட ரீதியாகக் காத்திரமான நடவடிக்கை ஏதுமில்லை.

அதற்கு மாறாக, அமைச்சரின் அட்டகாசங்களைத் தட்டிக் கேட்க முனைந்தவர்கள், அந்த முயற்சிக்கு ஆதரவளித்தவர்கள் என்று பலரும்வரிசையாகத் தாக்குதலுக்கு இலக்காகின்றார்கள். பிளேடுகளால் வெட்டப்படுகின்றார்கள். இனந்தெரியாத குழுக்களினால் நையப் புடைக்கப்படுகின்றார்கள்.

இவ்வளவும் போதாது என்று பகல் வேளையில், பல நூற்றுக்கணக்கானோரும், பொலிஸாரும் நேரில் பார்த்திருக்க ஊடகவியலாளர்களின் 'கமரா'க்களைப் பிடுங்கி, அபகரித்துச் செல்கிறார் அதே'சண்டித்தன' அமைச்சர். அவரது அந்த அட்டகாசமும் பிற கமராக்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. பொலிஸாரிடம் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது. ஆனால் இந்த அட்டூழியங்களுக்கெல்லாம் நடவடிக்கை ஏதுமே இல்லை.

நாட்டின் ஆட்சித் தத்துவமே அராஜகமாகிவிட்டதால், அந்த ஆட்சி முறைமையின் ஓர் அங்கத்தவரின் அட்டகாசத்தைத் தட்டிக்கேட்க வக்கற்ற - லாயக்கற்ற - நிலைக்கு ஆட்சித் தலைமை தள்ளப்பட்டுவிட்டது.

இதனால் விசனப்பட்டு - ஆதங்கப்பட்டு - மனம் உடைந்து போயுள்ள சக அமைச்சர்கள் இந்த அட்டூழியங்களுக்கெல்லாம் இறைவன்தான் தண்டனை வழங்க வேண்டும் என்று கடவுளிடம் இறைஞ்சவேண்டிய நிலைக்கு வந்துள்ளனர்.

மேற்படி 'சிரச' புகைப்படப்பிடிப்பாளர்கள் தாக்கப்பட்டு அவர்களின் கமராக்களை அரசின் அமைச்சர் ஒருவர் பறித்த வன்முறைப் போக்குக்காகத் தகவல் ஊடகத் துறை அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா வருத்தம் தெரிவித்து மன்னிப்புக் கோரியிருக்கின்றார்.

இந்த அநாகரிகச் சம்பவம் இடம்பெற்ற நிகழ்ச்சிக்கு ஊடகவியலாளர்களை அழைப்பு அனுப்பி வரவழைத்தது தமது அமைச்சே என்று தெரிவித்த அவர், அங்கு அரச அமைச்சர் ஒருவர் ஊடகவியலாளர்கள் மீது இவ்வாறு கேவலமாக நடந்து கொண்டமைக்காகத் தாம் வெட்கமும் வேதனையும் அடைகின்றார் என்று கூறியிருக்கின்றார்.

இதேபோல இந்த அமைச்சரின் செயலுக்கு இறைவன்தான் உரிய தண்டனை வழங்கவேண்டும் என அவரது கட்சியின் செயலாளரும் மற்றொரு அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன கூறுகின்றார்.

இவற்றை நோக்கும்போது நமக்கு இரண்டு விடயங்கள் தெளிவாகப் புரிகின்றன.

ஒன்று - இவ்வாறு அராஜகம் புரியும் அமைச்சரை அல்லது ஆட்சித் தரப்புப் பிரமுகரை நேரடியாகத் தண்டிப்பதற்கு அரசுத் தலைமைக்குத் தைரியமோ, திடமான துணிவு நிலையோ இல்லை என்பது.

அடுத்தது - இத்தகைய அராஜகத்தை நேரடியாகக் கண்டிக்கவோ அல்லது தண்டிக்கவோ ஆட்சிப் பீடத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களுக்கும் கூடத் துணிவும் இல்லை என்பது.

ஒளித்து மறைத்து, வழுவி, நழுவிக் கண்டிக்க வேண்டிய நெருக்கடியில் அவர்கள் உள்ளனர்.

அவரைக் கண்டித்தால் - அவரது அராஜகங்களை விமர்சித்தால் - அரசுத் தரப்பில் தங்களது கதை காலியாகிவிடும் எனப் பிற அரசுத் தரப்பு எம்.பிக்கள், அமைச்சர்கள் கருதுகின்ற - அஞ்சுகின்ற - சூழல்.

இது ஒரு தனி அமைச்சரின் செயற்பாடு சம்பந்தப்பட்ட விவகாரத்துடன் மட்டும் அடங்கும் விடயமல்ல.

நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கும் தேசிய இனப்பிரச்சினை கூட இதுபோன்ற 'சண்டித்தனப் போக்கில்தான்' அணுகப்படுகின்றது. அதிலும் கூட நீதி, நியாயம், தார்மீகம் குறித்தெல்லாம் குரல் காட்டக் கூட முடியாத நிலையில்தான் பல அமைச்சர்கள் இருக்கின்றார்கள்.

ஊடகத்திற்கு எதிரான ஓர் அமைச்சரின் அடாவடித்தனத்துக்குரிய தண்டனையைக் கடவுள்தான் வழங்க வேண்டும் என்ற நீதியையாவது குறிப்பிடும் சக அமைச்சர்களால், தேசிய இனப்பிரச்சினை விவகாரத்தை அரசுத் தலைமை கையாளுகின்ற கேவலத்தை ஒட்டி, 'இறைவன் தான் நீதி செய்ய வேண்டும்' - என்ற கூற்றைக் கூட வெளிப்படையாகக் கூற முடியாமல்தான் இருக்கின்றது.

இந்தக் கொடூர ஆட்சிப் பொறுப்பிலிருந்து நாட்டையும் மக்களையும் இறைவன்தான் காப்பாற்ற வேண்டும். அந்த உண்மையை இன்று ஆட்சிக் கட்டின் பங்காளிகளான அமைச்சர்களே பகிரங்கமாகக் குறிப்பிட்டு, ஒப்புக்கொள்ளும் அளவுக்கு நாடு கேவலமாகிவிட்டது.

# செவ்வாய்க் கிரகத்தில் உயிரினம் வாழ்வது சாத்தியம் என்கிறார் இலங்கை விஞ்ஞானி

கொழும்பு,ஓக.8

செவ்வாய்க்கிரகத்தில் தண்ணீர் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதை அக்கிரகத்தின் ஏனைய கண்டுபிடிப்புகளுடன் இணைத்துப் பார்க்கையில் அந்தக் கிரகத்தில் உயிரினம் வாழக்கூடிய சாத்தியத்தைக சுட்டிக்காட்டுவதாய் இருக்கின்றது என்று இலங்கையின் விண்வெளி உயிரின ஆய்வாளரும் வேல்ஸ் - கார்டிப் பல்கலைக்கழகத்தின் உயிரியல்துறைப் பேராசிரியருமான சந்திரா விக்கிரம சிங்க கூறியுள்ளார்.

நேர்காணல் ஒன்றில் அவர் பதிலளிக்கும்போது கூறியதாவது:

செவ்வாயில் தண்ணீர் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதையும் ஏற்கனவே செவ்வாயிலிருந்து கிடைத்துள்ள எரிகொள்ளி மாதிரிகளில் காணப்பட்ட உயிரிப் பொருள்களையும் மற்றும் செவ்வாய்க் கிரக சூழ்நிலையில் மெதேன் இருப்பதையும் இணைத்துப் பார்க்கையில் அக்கிரகத்தில் உயிர் இனம் வாழ்வது சாத்தியமானதே. உயிரினப் படிவங்களைப் பற்றி நான் கூறவில்லை. சமகால உயிரினம் பற்றியே பேசுகிறேன் என்றார் பேராசிரியர் விக்கிரமசிங்கம்.

கிரகங்களில் உயிரினப் பரம்பல் பற்றிய உலகப் புகழ்பெற்ற ஆய்வாளரான பேராசிரியர் சந்திரா விக்கிரம சிங்க வெள்ளிக் கிரகத்தின் மேல் பரப்பில் காணப்படும் மேக மண்டலத்திலும் கூட உயிரினம் இருப்பது சாத்தியம் என்று கருதுகின்றார். இந்த உயிரினங்கள் சூரியக் காற்றுகளினால் பூமியை நோக்கி வீசப்படுவதும் சாத்தியமே என்பது அவர் கருத்து.

நாஸா விஞ்ஞானிகளால் செவ் வாய்க் கிரகத்துக்கு அனுப்பப்பட்ட 'போனிக்ஸ்' செயற்கை கோள் அக்கிரகத்தின் வட துருவப் பகுதியில் நிலத்துக்கடியில் பனி வடிவிலான தண்ணீர் இருப்பதை உறுதி செய்துள்ளது. செவ் வாய்க்கிரக மண் மாதிரிகள் தொடர்பான ஆய்வுகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

## உரிமையாளர்களைப் பாரவூர்திகளைப் பதிய அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஓக.8

யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தில் தமது பாரவூர்திகளைப் பதிய விரும்புவர்கள் நாளை சனிக்கிழமைக்கு முன்னர் பதியுமாறு சங்கத்தினர் கேட்டுள்ளனர்.

சங்கத்தின் பதிவுகள் மட்டுப்படுத்தப்பட இருப்பதனாலும் துறைமுக தொடரணிச் சேவைக்குப் புதிய பட்டியல் வழங்கப்படவுள்ளதாலும் உடன் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

தவறும் பட்சத்தில் எதிர்காலங்களில் பதிவுகள் மேற்கொள்ளப்பட மாட்டாது என்றும் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (202)

# வடமராட்சியில் கலைஞர் கௌரவிப்பு

வடமராட்சி,ஓக.8

பிரபல பாடகரான நாகர்கோயிலைச் சேர்ந்த விஜயரத்தினம் என்னும் இயற்பெயர் கொண்ட ஈழத்துச் சௌந்தரராஜன் பருத்தித்துறைப் பிரதேச சபையினால் கௌரவிக்கப்படவுள்ளார்.

பருத்தித்துறைப் பிரதேச சபையின் உள்ளூராட்சி வாரவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு அல்வாய், திக்கம் கலாசார மண்டபத்தில் சபைச் செயலாளர் ச.சந்திரயோகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் வைத்து 11 கலைஞர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். அவர்களில் பிரபல பாடகர் ஈழத்துச் சௌந்தரராஜனும் ஒருவராவார். அத்துடன் இப்பிரதேச சபை எல்லைக்குள் கடந்த வருடம் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைந்த 66 மாணவர்களும், இச்சபையில் நீண்டகாலம் பணியாற்றி ஓய்வுபெற்ற சி.பசுபதி, எஸ்.திருச்செல்வம், வ.கந்தசாமி ஆகிய மூவரும் கௌரவிக்கப்படவுள்ளனர். (236-218)

# பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தின் கலாசார விழாவை அடுத்த மாதம் நடத்த ஏற்பாடு

கரவெட்டி,ஓக.8

பருத்தித்துறைப் பிரதேசக் கலாசாரப் பேரவை நடத்தும் வருடாந்த கலாசார விழா அடுத்த மாதம் நடைபெறவுள்ளது.

இரண்டு நாள் நடைபெறவுள்ள இவ்விழாவில் முதல்நாள் நிகழ்வுகள் பருத்தித்துறைப் பிரதேச செயலக புதிய கட்டடப் பொதுமண்டபத்திலும் இரண்டாம் நாள் நிகழ்வுகள் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய கலை மண்டபத்திலும் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வுகளில் பாரம்பரியக் கலை நிகழ்வுகள், கலைஞர் கௌரவிப்பு ஆகியவையும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் இணைந்துகொள்ள விரும்பும் கலை ஆர்வலர்கள் தங்கள் கலை நிகழ்வுகளையும் ஆக்கங்களையும் இம்மாத நடுப்பகுதிக்குள் பிரதேச செயலக கலாசாரப் பிரிவினருடன் தொடர்புகொண்டு சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன் கேட்டுள்ளார். (202-70)




யாழ்ப்பாணம்,ஓக.8

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயப் பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12.05 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்தும் 18 நாள்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 17ஆம் திகதி மாலை 5 மணிக்கு மஞ்சத் திருவிழாவும் 23ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும் இடம்பெறும்.

எதிர்வரும் 24ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று 11.30 மணியளவில் சுவாமி தேரில் எழுந்தருளுவார். பிற்பகல் 1.30 மணியளவில் உறியடித் திருவிழா இடம்பெறும்.

25ஆம் திகதி முற்பகல் 11 மணிக்குத் தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (203-28-78)

* * *

வலி.வடக்கு,ஓக.8

அளவெட்டி குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலயப் பெருந்திருவிழா நேற்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 15ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203-86)

* * *

மந்திகை,ஓக.8

வடமராட்சி, வதிரி பூவற்கரை விநாயகர் ஆலயப் பெருந்திருவிழா நேற்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 15ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203-218)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.8

உடுவில் கிழக்கு கற்பகப்பிள்ளையார் ஆலயப் பெருந்திருவிழா கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 15ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203)

* * *

குருநகர்,ஓக.8

யாழ்.புனித மரியன்னை பேராலயத்தின் வருடாந்த திருவிழாவிற்கான ஆயத்த வழிபாடுகள் கடந்த புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளன.

நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 4.30 மணிக்கு நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 14ஆம் திகதி வியாழக்கிழமை 4 மணிக்கு நற்கருணை நாதர் திருவிழா நடைபெறும். மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 5.30 மணிக்கு முதலாவது திருப்பலியும் காலை 7 மணிக்கு யாழ்.ஆயர் தலைமையில் திருநாள் திருப்பலியும் பிற்பகல் 3.30 மணிக்கு அன்னையின் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (202-51)

* * *

ஊர்காவற்றுறை,ஓக.8

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு இராக்கச்சி அம்மன் ஆலய ஆடிப்பூர பெரும்பொங்கல் விழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. (127)

# நல்லூர்க் கோட்ட ஆசிரியர்களுக்கு கருத்தரங்கு

நல்லூர்க் கோட்டத்தைச் சேர்ந்த யாழ்.இந்துக் கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி, செங்குந்த இந்துக் கல்லூரி, முத்துத்தம்பி ம.வி. ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான நிதி முகாமைக் கருத்தரங்கு எதிர்வரும் திங்கட்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

குறிப்பிட்ட பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களை இதில் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (203)

# ஆன்மீக நிகழ்வு

வடமராட்சி, ஓக.8

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சுற்றாடலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிறு தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வு வரிசையில் நாளை மறுதினம் மு.ப. 11 மணிக்கு தென் புலோலி புற்றளை மகா வித்தியாலய மாணவர்களின் பஜனை இடம்பெறும். (203-236)

# தமிழக மொழியியல் பேராசிரியர் அகத்தியலிங்கம் கார் விபத்தில் பலி

யாழ்ப்பாணம்,ஓக.8

தமிழக மொழியியல் பேராசிரியர் டாக்டர் ச.அகத்தியலிங்கம் கடந்த திங்கட்கிழமை கார் விபத்தில் அகால மரணமானார்.

பாண்டிச்சேரி நோக்கிச் சென்று கொண்டிருந்த இவரது கார் லொறியுடன் மோதியதில் பேராசிரியர் டாக்டர் ச.அகத்தியலிங்கம், அவரது மனைவி, கார் சாரதி ஆகிய மூவரும் அந்த இடத்திலேயே பலியாகினர்.

பேராசிரியரின் பேர்த்தியார் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

மிகச் சிறந்த திராவிட மொழியியலாளரான இவர் சங்க இலக்கிய பதிற்றுப் பத்து நூலின் மொழி அமைப்பினை ஆராய்ந்து முனைவர் பட்டத்தினைப் பெற்றவர்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் மையத்தின் இயக்குநராகப் பணிசெய்து பல மொழியியலாளர்களை உருவாக்கியுள்ளார். மொழியிலும் இலக்கியத்திலும் ஆற்றல் படைத்தவராக இவர் விளங்கியவர்.

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இருந்த இவர் அண்மையில் காலமான ஜப்பானியப் பேராசிரியர் சுசுமு ஒனோவின் தமிழ் - ஜப்பானிய ஆய்வுடன் தொடர்புடையவர்.

தமிழ்நாட்டில் இடம்பெறும் மொழி இலக்கிய மாநாடுகள் யாவற்றுக்கும் அவர் சிறப்பு நிலையில் அழைக்கப்படுபவர். அவருடைய பணி, தமிழ் வரலாற்றில் அவருக்குச் சிறப்பான இடத்தைக் கொடுத்துள்ளது.

இவரது இழப்புத் தொடர்பாக பேராசிரியர் அ.சண்முகதாஸ் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், யாழ்.பல்கலைக்கழகத்துடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வந்த இவருடைய இழப்பு தமிழ் அறிவுலகிற்குப் பேரிழப்பாகும் - என்று குறிப்பிட்டுள்ளார். (203)

## நாளை

| | |
|---|---|
| ஆடி 24 | 09.08.2008 சனிக்கிழமை |
| திதி: | அட்டமி பி.ப. 04.51 வரை |
| நட்சத்திரம் : | விசாகம் பி.இ.01.42வரை |
| சுபநேரம் : | 03.04 - 04.34 |
| ராகுகாலம் : | 09.04 - 10.34 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெலிக்கந்தையில் ஜே.வி.பியின் முகாமை கருணா குழு தாக்கியதாக முறைப்பாடு

கொழும்பு, ஓக.8

வெலிக்கந்தையிலுள்ள ஜே.வி.பி. அலுவலகம் மீது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் (கருணா குழு) மங்களம் மாஸ்டர் தலைமையிலான குழுவினர் தாக்குதலை மேற்கொண்டனர் என அக்கட்சி குற் றம்சாட்டியுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை பொலனறுவையில் உள்ள ஜே.வி.பி. அலுவலகங்கள் மூன்றின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஜே.வி.பி. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சுபசிங்க தெரிவித்தார்.

வெலிக்கந்தை மெரிகிரிய மற்றும் கிரிமேட்டிய பகுதிகளில் உள்ள கட்சியின் அலுவலகங்கள் தாக்கப்பட்டுத் தீக்கிரையாக்கப்பட்டன என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெலிக்கந்தை அலுவலகம் மீது தேர்தலில் போட்டியிடும் மங்களம் மாஸ் டர் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களே தாக்குதலை மேற்கொண்டனர் எனவும் அவர் குறிப்பிட்டார். (சி)

# திருடர்களும் ரவு[illegible]களுமே இந்த அரசில் அமைச்சர்கள்

## சாடுகின்றது ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு, ஓக. 8

ரயில்களில் பெண்களிடமிருந்து தங்கச் சங்கிலிகளைப் பறித்துச் சென்றவர்கள், சவரக் கத்திகளால் ஊடகவியலாளர்களை வெட்டியவர்கள், ஊடகவியலாளர்களிடமிருந்து கமராவைப் பறித்துக் கொண்டு ஓடியவர்கள் போன்றோரே அரசின் பக்கத்தில் அமைச்சர்களாக உள்ளனர் என்று ஐ.தே.கட்சி எம்.பி. லக்ஷ்மன் செனிவிரட்ன நேற்று முன்தினம் நாடாளுமன்றில் சாடினார்.

அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இங்கு ஊடகவியலாளர்கள் கடுமையாகத் தாக்கப்படுகின்றனர். அமைச்சர் மேர்வின் சில்வா இவ்வாறான செயற்பாட்டில் பல தடவைகள் ஈடுபட்டுள்ளார்.

களனி மேம்பாலத் திறப்பு விழாவை வீடியோப் படம் பிடிக்கச் சென்ற சிரச ஊடகவியலாளர்கள் மேர்வின் சில்வாவின் ஆள்களால் தாக்கப்பட்டதோடு அவர்களின் வீடியோக் கமராக்களும் பறித்துச் செல்லப்பட்டன. அரசு மேர்வின் சில்வா விடயத்தில் என்ன நடவடிக்கை எடுத்தது?

பொலிஸ் மா அதிபரும் தொலைக்காட்சியில் இந்தத் தாக்குதல் தொடர்பான செய்தியைப் பார்த்தார். அவரும் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

ஆனால், பொலிஸ் மா அதிபர் குற்றச்செயல்களைப் படம்பிடித்துத் தருமாறு கேட்கின்றார். இந்தக் குற்றச்செயல் படப்பிடிப்புத் தான் தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்டது. இதற்குப் பொலிஸ் மா அதிபர் என்ன செய்யப்போகிறார்.

இந்தச் சபையில் அரசின் சார்பில் இவ்வாறு ஊடகவியலாளர்களைத் தாக்கி வீடியோ கமராக்களைப் பறித்துச் செல்பவர்களும், ரயில்களில் தங்கச் சங்கிலிகளைப் பறித்தவர்களுமே இந்த சபை[illegible] அரசின் சார்பில் அமைச்சர்களாக உள்[illegible]ர் - என்றார். (சி)

# யுத்தத்தில் அரசு வெற்றிபெற வேண்டுமெனில் இந்தியாவின் அழுத்தத்திலிருந்து விடுபடவேண்டும்

## நாடாளுமன்றில் சபையில் ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர்

கொழும்பு, ஓக. 8

இந்தியாவுக்கு அடிபணிந்து நிற்கும் இலங்கை அரசு சீனன்குடா விகாரையில் பௌத்தபிக்கு ஒருவரைச் சுட்டுக்கொன்ற இந்தியப் படையினருக்காக நாடாளுமன்றிற்கு அருகில் நினைவுத் தூபிகளை அமைத்துள்ளது.

- இவ்வாறு ஜே.வி.பி பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அவசர காலச்சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

புலிகளை நாம் யுத்தத்தால் தோற்கடிப்பது மாத்திரமன்றி கருத்தியல் ரீதியாகவும் தோற்கடிக்க வேண்டும்.

இன்று வடக்கில் இடம்பெறும் யுத்தத்தால் புலிகள் முற்றாகத் தோற்கடிக்கப்படுவர் என்று மக்கள் எதிர்பார்த்திருக்கின்றனர். ஆனால், அரசு அமைச்சர்கள் சிலர் இந்த எதிர்பார்ப்பைத் தோற்கடிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

கிழக்குத் தேர்தல் முடிந்ததும் அங்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்படும் என்றும் வடக்கு பிரபாகரனுக்கு வழங்கப்படும் என்றும் அவர்கள் கூறித்திரிந்தனர்.

மொத்தத்தில் இந்தியாவின் தலையீடே இதற்கெல்லாம் காரணமாகும். கிழக்கில் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு இந்தியா இலங்கைக்குக் கூறியுள்ளது.

இந்த யுத்தத்தால் உண்மையில் வெற்றி பெற வேண்டும் என்றால் இந்தியாவின் அழுத்தத்தில் இருந்து அரசு விடுபடவேண்டும்.

அதேபோல், சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் ஊடாகக் கொண்டு வரப்படுகின்ற தீர்வு யோசனைகளையெல்லாம் கைவிடவேண்டும், இல்லையேல், முழுமையான வகையில் பிரிவினை வாதத்தைத் தோற்கடிக்க முடியாது - என்றார். (சி)


நாடாளுமன்றிலிருந்து...

## தென்மராட்சியில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றவர்களுக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஓக.8

தென்மராட்சிப் பிரதேசத்தில் சரசாலை வடக்கு, பாலாவி ஆகிய இடங்களில் சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற 17 பேரிடமிருந்து 72 ஆயிரம் ரூபா நட்டஈடாக அறவிடப்பட்டது.

இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரி அலுவலகத்தினர் அண்மையில் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் போது சட்ட விரோதமாக மின்சாரம் பெற்றவர்களைக் கண்டுபிடித்தனர்.

இவர்களிடமிருந்து சட்ட விரோத மின்சார உபகரணங்கள் பறிமுதல் செய்ததுடன் நட்டஈடும் அறவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (202-207)

## காக்கைதீவு முன்பள்ளியின் நூலகத் திறப்பு விழா

நவாலி, ஓக.8

காக்கைதீவு முன்பள்ளியின் நூலகத் திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு காக்கைதீவு பொது மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தின் அனுசரணையுடன் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் கலந்துகொளவார். (203-100)


## சேவைநலன் பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்தும்



மின்சார சேவையில் இருந்து
இளைப்பாறும்
உயர்திரு. கோபாலபிள்ளை
வாமதாசன்
அவர்கள்

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இவர் பல்வேறுபட்ட போக்குவரத்துச் சிரமங்களின் மத்தியிலும் தீவகம் முழுவதும் சென்று (நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, நெடுந்தீவு, புங்குடுதீவு, வேலணை) தம் சேவையைச் செவ்வனே ஆற்றி 08.08.2008இல் 57 வயதைப் பூர்த்தி செய்து ஓய்வுபெறுகின்றார். 27 வருட காலம் மின்சார சேவையில் மக்கள் மனதில் ஆழமாகப் பதிந்தவர். மின்சார சேவையில் மட்டுமன்றிப் பொதுச்சேவையிலும் ஆர்வம் கொண்டவர். அறப்பணி, ஆலயப் பணி, சமூகப் பணி எனத் தம் சேவையை எங்கும் வியாபித்துக் கொண்டவர். எம் நிலயத்தின் ஆரம்பகால உறுப்பினராகவும் போஷகராகவும் இருந்து வழிநடத்தி வருகின்றார். இவரின் சேவை நலனைப் பாராட்டுவதிலும் பிறந்தநாள் வாழ்த்தைத் தெரிவிப்பதிலும் எம் நிலையம் பெருமகிழ்வடைகின்றது. இவர் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் வாழ எல்லாம் வல்ல நயினை ஸ்ரீ தில்லை வெளிப்பிடாரி அம்பாளின் இறையாசியை வேண்டி நிற்கின்றோம்.

ஸ்ரீபிடாரி அம்பாள் சனசமூக நிலையம், நயினாதீவு.

(77030)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 09 | 09 |
| 07 | 07 |
| 1927 | 2008 |



திருமதி மார்க்கண்டு பொன்னுப்பிள்ளை

09.07.2008 அன்று அமரத்துவமடைந்த எங்கள் குடும்பக் குல விளக்கின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் இன்று (08.08.2008) வெள்ளிக்கிழமை கைதடி மேற்கு, கைதடியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் மு.ப.11 மணியளவில் நடைபெறும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி மேற்கு,
கைதடி.

(77028)

குடும்பத்தினர்


## கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

சாவகச்சேரி புகையிரத நிலைய வீதியில் உள்ள முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபையினர் நுணாவில் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள தரம் ஒன்று தொடக்கம் தரம் 5 வரையான வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கவுள்ளனர்.

இன்று வெள்ளிக்கிழமை ஆலய மண்டபத்தில் வைத்து இக்கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (202-20[illegible])


## சட்டத்தரணி/ நொத்தாரிசிற்கு உதவியாளர் தேவை

**வேண்டப்படும் தகைமைகள்:**

| | |
| --- | --- |
| கல்வித்தராதரம்: | 01. தமிழ்ப் பாடத்தில் குறைந்தபட்சம் க.பொ.த.(உயர்தர) பரீட்சையில் திறமைச் சித்தி<br>02. கணனி கையாள்வதில் சிறந்த தேர்ச்சி |
| வயதெல்லை: | 23- 40 வரை |
| வதிவு: | யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் அல்லது சுழிபுரம்/ சித்தன்கேணியில் வதிபவராக இருத்தல். |
| வேறு தகைமைகள்: | 1. சொந்தக் கணனி வைத்திருத்தல் அல்லது கணனி உபயோகிக்கும் வசதி இருத்தல்.<br>2. கடுமையாக உழைப்பதற்கான விருப்பும் ஆற்றலும்<br>3. நல்ல தொடர்பாடல் திறமை. |

ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

முதற்கண் முழு சுயவிபரக்கோவையுடன் கடிதத்தால் மட்டும் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். நேரில் வருவதைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும்.

முகவரி: திருமதி மணிமேகலை.
ஆனைப்பந்திவளவு, தொல்புரம், சுழிபுரம்.

(77025)



# கலாலயா

பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில் - யாழ்ப்பாணம்

மகளிருக்கான துரித குறுகிய கால பயிற்சிகள்

## விடுமுறைக் கால புதிய வகுப்புக்கள்

(11-08-2008 தொடக்கம் 31-08-2008 வரை)

பாடசாலை ஆசிரியைகள், மாணவிகள் மற்றும் மகளிருக்குமானது.

- கூந்தல் அலங்காரம் : பலவகையான கொண்டைகள் போடுதல்
- அடிப்படை Facial அழகுக்கலை மற்றும் மணப்பெண்கள் அலங்காரங்கள்
- பப்றிக் வர்ணம் தீட்டுத ல் : கைக்குட்டை, தலையணை உறை, கண்ணாடி மற்றும் சேலையில் (Saree Painting) வர்ணம் . டுதல்.
- பூ வேலை, கைவேலை
- சாறிபிளவுஸ், சுரிதார், Skirts தைத்தல்
- தையல் தெரியாதவர்களுக்கான அடிப்படைத் தையல்

மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது

ஆரம்பம் - 11-08-2008 திங்கள் காலை 9.00 மணி

மேலும் விபரங்களை பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

பதிவாளர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக் விழா இன்று கோலாகல ஆரம்பம்



சீனாவின் பாரம்பரிய உடை அணிந்து ஒலிம்பிக் மகிழ்ச்சியை கொண்டாடும் சிறுமிகள்

பீஜிங், ஓக 08

உலகமே ஆவலுடன் எதிர்பார்க்கும் ஒலிம்பிக் போட்டிகள் பெய்ஜிங்கில் இன்று தொடங்குகின்றன.

2008 ஆகஸ்ட் 8ஆம் திகதி (08-08-08) சீன நேரப்படி இரவு 8.08 மணிக்கு தொடக்க நிகழ்ச்சி நடைபெறுகிறது.

தொடக்க நிகழ்ச்சிகளில் 104 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கிறார்கள் என ஒலிம்பிக் போட்டிக்கான சீன ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் லியு கி கடந்த செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

கடந்த மார்ச்சில் திபெத்தில் நடைபெற்ற கலவரமும் அதனையடுத்து சீனா மேற்கொண்ட அடக்கு முறை உத்தியும் மேற்கத்திய நாடுகளின் கடும் கண்டனத்திற்கு உள்ளாகின. இந்நிலையில், அந்த நாடுகளின் தலைவர்கள் தொடக்க நிகழ்ச்சியில் பங்கேற்பாளர்களா? என்பது கேள்விக்குறியாகவே இருந்து வந்தது.

இந்நிலையில் பல்வேறு நாடுகளின் தலைவர்கள் இதில் பங்கேற்பதை உறுதி செய்துள்ளனர். தொடக்க நிகழ்ச்சியில் பங்கேற்காவிட்டால் அது சீன மக்களை அவமதிப்பதாகும் என அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் ஏற்கனவே கூறியிருந்தார். தொடக்க நிகழ்ச்சியை தாம் புறக்கணிக்கப் போகிறார் என கூறி வந்த பிரான்ஸ் அதிபர் நிகோலஸ் சர்கோஸி, தற்போது தனது எண்ணத்தை மாற்றிக்கொண்டுள்ளார்.

சீனாவை விமர்சித்து வந்த ஆஸ்திரேலிய பிரதமர் கெவின் ரூட் கூட பெய்ஜிங் வருவது உறுதியாகி உள்ளது. ஒலிம்பிக்கைப் புறக்கணிப்பதில் நம்பிக்கை இல்லையென ரூட் தெரிவித்தார். பிரிட்டன் பிரதமர் கார்டன் பிரௌன் நிறைவு நிகழ்ச்சியில் பங்கேற்பதை உறுதி செய்துள்ளார்.

ரஷிய அதிபர் விளாடிமீர் புடின், பிரேசில் அதிபர் லூயிஸ் இனாசியோ லூலா டி சில்வா ஆகியோரும்பீஜிங் வர உள்ளனர்.

சீனாவின் எதிரியாக கருதப்படும் தைவானின் ஆளும் தேசியக் கட்சித் தலைவர் வூ போ-ஹிசியுங்கும் தொடக்க நிகழச்சிக்காக பெய்ஜிங் வருகிறார். வர்த்தகம் மற்றும் அரசியல் நிகழ்வுகள்தான் இந்த தலைவர்களை சீனாவுக்கு செல்லத் தூண்டியுள்ளது என சீனா குறித்து வாஷிங்டனில் ஆராய்ச்சி செய்துவரும் டக்ளஸ் பால் என்பவர் தெரிவித்தார்.

இந்நிலையில், கனடா, ஜெர்மனி தலைவர்கள் யாரும் தொடக்க நிகழச்சியில் பங்கேற்கவில்லை. அதே போன்று, சூடான், ஜிம்பாப்வே, ஈரான், வடகொரியா ஆகிய நாடுகளின் தலைவர்களும் பங்கேற்கவில்லை.

2008ஆம் ஆண்டின் 8ஆவது மாதமான ஓகஸ்டில், 8ஆம் நாள் சீன நேரப்படி இரவு 8மணி 8நிமிடம் 8விநாடிக்கு, நேஷனல் பேர்ட்ஸ் நெஸ்ட் (பறவைக் கூடு வடிவில் அமைந்தது) ஸ்டேடியத்தில் ஒலிம்பிக் போட்டிகள் துவங்குகின்றன. நூறு ஆண்டுகளுக்கு ஒரு முறை மட் டுமே வரும் இந்த திகதி மற்றும் விநாடி யில் ஒலிம்பிக் போட்டிகளை துவக்குவதில் சீன அரசும் ஒலிம்பிக் சபையும் பெருமை கொள்கின்றன. ஒலிம்பிக் கிரீன் எனும் கிராமமும் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள் ளது. ஹிட்லருக்கு தலைமை கட்டடக்கலை நிபுணராக இருந்தவரின் மகனான ஆல்பர்ட் ஸ்பியர்தான் இந்த கிராமத்தை வடிவமைத் துள்ளார்.

## கலிபோர்னிய காட்டுக்குள் 'ஹெலி' விபத்து: 9 பேர் உயிரிழப்பு; 4 பேர் கடுங்காயம்

அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியாவில் பரவி வரும் காட்டுத் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்ட ஹெலிக்கொப்டரொன்று, கட்டுப்பாட்டை இழந்து, கீழே விழுந்து நொறுங்கியது. இதில் 9 பேர் உயிரிழந்தனர். 4 பேர் கடுங் காயமடைந்தனர்.

இந்த ஹெலிக் கொப்டரில் 2 விமானிகளும், 11 தீயணைப்புப் படை வீரர்களும் இருந்துள்ளார்கள். ஹெலிகொப்டர் விழுந்த இடத்திலும் காட்டுத் தீ எரிந்து கொண்டிருந்தது. அதனால் காயமடைந்தவர்கள் தீயில் சிக்கி தீக்காயங்களுக்கு முள்ளானார்கள்.


### தவறிவிட்டது

செல்லத்துரை பிரதீஸ்குமார் என்பவரது கடவுச்சீட்டு (Pass Port) 05.08.2008 செவ்வாய்க்கிழமை ஏழாலைக்கும் - சண்டிலிப்பாய்க்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ் வரும் முகவரியில் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: கம்மாலையடி, சண்டிலிப்பாய் மத்தி, சண்டிலிப்பாய் அல்லது உப தபாலகம், சண்டிலிப்பாய்.


# ஈரானுக்கு எதிராக மேலும் பொருளாதாரத் தடைகள்: பரிசீலனை நடத்த முக்கிய வல்லரசுகள் உடன்பாடு

## கலந்தாலோசனையை அடுத்து அமெரிக்கா தகவல்

வாஷிங்டன், ஓக 08

''ஈரான் தனது அணுத்திட்ட நடவடிக்கைகளைக் கைவிட மறுத்து வருகின்றது. அதனால் அதற்கு எதிராக மேலும் இறுக்கமான பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும். இவ்விடயம் தொடர்பாக பரிசீலிக்க முக்கிய வல்லரசுகள் உடன்பாடு தெரிவித்துள்ளன'' என, அமெரிக்கா நேற்று வியாழக்கிழமை தெரிவித்தது.

''இவ் விவகாரம் தொடர்பாக, ஐ.நா. பாதுகாப்பு சபையில் அங்கம் வகிக்கும் நிரந்தர ஐந்து உறுப்பு நாடுகளுக்கும், ஜெர்மனிக்குமிடையில் கலந்தாலோசனை நடைபெற்றது. இதில் இந்த உடன்பாடு ஏற்பட்டது'' என்றும் அது குறிப்பிட்டது.

''ஈரான் தனது அணுத்திட்டங்கள், அணுபயன்பாடுகள் ஆகியவை தொடர்பாக, இதய சத்தியோடு, விளக்கமளிக்க வேண்டும். எனினும் இதற்கான வாய்ப்பை அது தட்டிக்கழித்து விட்டது'' என, இந்த ஆறு நாடுகளும் கலந்தாலோசனையில் சுட்டிக் காட்டின வென்றும் அமெரிக்கா விளக்கியது.

''ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளான சீனா, பிரான்ஸ், ரஷ்யா, பிரிட்டன், அமெரிக்கா ஆகியவற்றிற்கும், ஜெர்மனிக்குமிடையே, தொலைபேசி மூலமாக, இந்த கலந்தாலோசனை இடம்பெற்றது. ஈரானின் யூரேனிய செறிவூட்டல் நடவடிக்கை, இந்நிகழ்ச்சியில் முக்கிய இடத்தை வகித்தது'' என அமெரிக்க இராஜதந்திரி ஒருவர் கூறினார்.

ஈரான் அணு ஆயுதங்கள் தயாரிப்புக்கு ஏதுவான யூரேனிய செறிவூட்டலை உடனடியாகக் கைவிட்டு விட வேண்டும். இல்லையேல் இறுக்கமான மேலதிக பொருளாதாரத் தடை விதிப்புகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் என, இந்த ஆறு நாடுகளும் ஜூனிலும் ஈரானுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தன.

''விளக்கமளிக்குமாறு கோரிக்கை விடுத்து, இவ்வார ஆரம்பத்தில் ஈரானுக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது. கால அவகாசமும் அளிக்கப்பட்டது. அதனையும் அது உதாசீனப்படுத்தி விட்டது'' என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் சுட்டிக்காட்டியது.

''ஈரானுக்கு எதிராக நான்காவது தடவையாகவும் பொருளாதாரத்தடைகள் விதிக்கப்பட வேண்டுமென கலந்தாலோசனையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. அதே வேளை ஈரானுடனான பேச்சுகளால் வெற்றி கிட்டுமென்பதற்கில்லை'' என, ஐ.நா.வுக்கான ரஷ்யத் தூதுவர் விட்டலி போகின் தெரிவித்துக் கொண்டார்.

## பெனாஸிரின் புதல்வியும் அரசியல் களமிறங்குகிறார்

இஸ்லாமாபாத், ஓகஸ்ட் 08

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாஸிரின் புதல்வி பக்டாவர் பூட்டோ சர்தாரியை, அரசியலில் ஈடுபடுத்த, அவரது தந்தையும், ஆளும் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவருமான ஆசிப் அலி சர்தாரி முடிவு செய்துள்ளார்.

பாகிஸ்தான் மக்கள் கட்சியின் மகளிர் பிரிவில் பக்டாவருக்கு முக்கிய பொறுப்பு அளிக்கப்படவுள்ளது. இப் பொறுப்புடன் அவரை, அவரது தாயைப் போல முக்கிய தலைவியாக உருவாக்க வேண்டு மென்பதே தந்தை சர்தாரியின் அபிலாஷையாக உள்ளது.

இது தொடர்பாக கட்சி மகளிர் பிரிவு பொறுப்பாளர்களுடன் சர்தாரி ஆலோசனை நடத்தியுள்ளார். சிரேஷ்ட பெண் தலைவிகளின் ஒப்புதலோடு, தமது புதல்வியை சர்தாரி அரசியல் களத்தில் இறக்குகிறார்.

பாகிஸ்தான் மக்கள் கட்சி, முன்னாள் பிரதமர் பெனாஸீரின் தந்தையும், முன்னாள் பிரதமருமான சுல்பிஹார் அலி பூட்டோவால் நிறுவப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தோனேஷியாவிலும் நேற்று நிலநடுக்கம்

ஜகர்த்தா, ஒக்ஸ்ட் 08

இந்தோனேஷியாவிலுள்ள சும்பாவா தீவில் நேற்று வியாழக்கிழமை, அதிகாலை 4 மணியளவில் திடீர் நில நடுக்கம் ஏற்பட்டது. வீடுகள் குலுங்கின. அப்போது மக்கள் துயின்று கொண்டிருந்தனர்.

வீடுகள் குலுங்கியதும் மக்கள் அலறியடித்துக் கொண்டு, வீடுகளை விட்டு வெளியே ஓடினார்கள். சில வினாடிகள் வரை நில நடுக்கம் நீடித்தது. முந்நூறுக்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்து விழுந்தன.

இடிபாடுகளுக்குள் சிக்கி, 56 பேர் காயமடைந்தனர் என முதற்கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. உயிர்ச் சேதம் ஏற்பட்டமைக்கான தகவல் உடனடியாக வெளியாக வில்லை.

இந்நில நடுக்கத்தின் தாக்கம் ரிச்டர் அளவு கோலில், 6.6 புள்ளிகளாக பதிவாகியுள்ளது. இதனால் சுனாமி எழுவதற்கான வாய்ப்பு இல்லை என பூகற்பவியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

## நிலநடுக்கம்: சீனாவில் ஆயிரக்கணக்கான வீடுகள் நிர்மூலம்

பீஜிங், ஓக 08

சீனாவின் சிசுவான் மாகாணத்தில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் பல பிராந்தியங்களில் பாரிய அனர்த்தங்கள் நிகழ்ந்துள்ளன. நால்வர் பலியாகினர். 60 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். ஆயிரக்கணக்கான வீடுகள் நிர்மூலமாக்கப்பட்டு விட்டதாக, உத்தியோகபூர்வ சிங்குவா செய்தி நிறுவனம் தெரிவித்தது.

யவோடு நகரில் இருவரும், அயல் மாகாணமான கன்சுவிலில் ஒருவரும், வெஞ்சியான் பிராந்தியத்தில் ஒருவரும் பலியாயினர். யவோடு பிராந்தியத்தில் குடிதண்ணீர், மின்சார விநியோகங்கள் தடைப்பட்டன. தொலைத்தொடர்பு சாதனங்கள் சேதமடைந்தன. 3,200 க்கு மேற்பட்ட வீடுகள் சரிந்து விட்டனவென்றும் அது குறிப்பிட்டது.

கன்சு மாகாணத்தில், 35 பேரும், வெஞ்சியானில் 60 பேரும், காயமடைந்தனர். அதிகாரிகள் சேத விவரங்களை மதிப்பீடு செய்வதில் ஈடுபட்டுள்ளார்உகள். வீடு வாசல்களை இழந்தவர்கள் பாடசாலைகள் இன்ன பிற அரச கட்டடங்கள் ஆகியவற்றில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள் என்றும் இவ்வூடகம் விவரித்தது.


## பிளாஸ்ரிக் கதிரைகள் தேவை

புதிய அல்லது பயன்படுத்திய நல்ல நிலையிலுள்ள பிளாஸ்ரிக் கதிரைகள் உடன் தேவை. விற்க விரும்புவோர் விலை விவரங்களுடன் நேரிலோ அல்லது தபால் மூலமோ அல்லது 021 - 222 2646 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்புகொள்ளவும்.

அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்.


## மரண அறிவித்தல்கள்



### இலங்கைநாயகம் வள்ளியம்மை

திருமதி இலங்கைநாயகம் வள்ளியம்மை நேற்று (07.08.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா (பண்டிதர்)- பராசக்தி ஆகியோரின் அன்பு மகளும் அமரர் இலங்கைநாயகத்தின் மனைவியும், விக்கினேஸ்வரன் (மின்சாரசபை, சுன்னாகம்), நளாயினி (லண்டன்), நந்தினி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயும், ஜெயகுமரன் (நோர்வே), செந்தில்தரன் (லண்டன்), சுகந்தினி(தெல்லிப்பழை பிரதேச சபை) ஆகியோரின் மாமியாரும் ஜகதுக்ஷா, தீபதன், பிறின்சிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.08.2008) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.30 மணியளவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக் கொள்ளவும்.

இணுவில் மேற்கு.

தகவல்:
பிள்ளைகள், பேறாமக்கள்



### சின்னட்டியர் தம்பிராசா

ஏழாலை மேற்கு, கோட்டைக்காட்டை பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னட்டியர் தம்பிராசா நேற்று (07.08.2008) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் சின்னட்டியர்-முத்துப்பிள்ளையின் கனிஷ்ட மகனும், சற்குணம்-முத்துப்பிள்ளையின் அன்பு மருமகனும், அன்னபூரணத்தின் (மணிக்குஞ்சு) அன்புக் கணவரும் சுந்தரம், கந்தையா, (ஓய்வுபெற்ற ஆசிரியர்)ஆகியோரின் அன்புச் சகோதரனும், சந்திரகுமாரின் அன்புத் தந்தையும், லலிதாதேவியின் அன்பு மாமனாரும், ஜெயகணேஷ், ஜெயசாயினி, தனுசன், பிரதாயினி, சாரங்கன் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.08.2008) நண்பகல் 12 மணிக்கு தாவடி இந்துமயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் தெற்கு,
இணுவில்

தகவல்:
மனைவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

# மேர்வின் சில்வாவின் காடைத் தனத்தால் வெட்கித் தலைகுனிகிறாராம் ஊடக அமைச்சர்!

## நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் உறுதி!

களனி பாலத் திறப்பு விழாவின்போது ஊடகவியலாளர்கள் மீது அமைச்சர் மேர்வின் சில்வாவின் அடியாட்களால் நடத்தப்பட்ட தாக்குதல் குறித்தும் அவர்களின் வீடியோக் கமராக்கள் பறித்துச் செல்லப்பட்டமை குறித்தும் தான் வெட்கித் தலை குனிகிறாரென்று ஊடகத்துறைஅமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா நேற்றுக் கூறினார்.

இச்சம்பவம் ஊடகவியலாளர்கள் மீதான இறுதித் தாக்குதல் சம்பவமாக இருக்கும் வகையில் தான் கடுமையான எடுக்கப் போவதாகவும் அவர் கூறினார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அமைச்சரிடம் ஊடகவியலாளர்கள் இது தொடர்பாக எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

களனிப்பாலமதிறப்புவிழாவுக்குஅணைத்து ஊடகவியலாளர்களையும் நாம் அழைத்திருந்தோம். அதேபோல் 'சிரச' வினரையும் அழைத்திருந்தோம்.

ஆனால், துரதிஷ்டவசமாக அங்கு ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தப் பட்டது. இது தொடர்பாக நான் தனிப்பட்டமுறையில் கவலையடைகிறேன்; வெட்கப்படுகிறேன்.

**எனக்குத்தான் மானக்கேடு**

இந்த நிகழ்வுக்கு ஊடகவியலாளர்களை நாமே அழைத்திருந்தோம் என்பதால் இந்தத் தாக்குதலால் எனக்குத்தான் மானக்கேடு. இந்தத் தாக்குதலை நான் ஒருபோதும் அனு மதிக்க மாட்டேன்.

நான் வெட்கித் தலைகுனியும் நிலையை இந்தத் தாக்குதல் உருவாக்கிவிட்டுள்ளது. இந்தத் தாக்குதல்தான் ஊடகவியலாளர் கள் மீது நடத்தப்பட்ட இறுதித் தாக்குதலாக இருக்கவேண்டும. அதற்கான முயற்சியில் நான் இப்போது இறங்கியுள் ளேன் - என்றார்.

ஆனால், இவ்வாறு மன்னிப்புக் கோரும் வகையில் பேசிவிட்டு இதிலிருந்து நழுவாமல் ஊடகத்துறை அமைச்சர் என்ற வகையில் இது தொடர்பாக நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள் என்று ஊடகவியலாளர்கள் அவரிடம் கேள்வியெழுப்பினர்.

என்னிடம் பொலிஸ் அதிகாரம் கிடையாது. இது தொடர்பிலான பொலிஸ் விசாரணையைப் பொறுத்திருந்து பார்ப்போம் என்றும் அமைச்சர் பதிலளித்தார்.

தேங்காய் ஒன்றைத் திருடியவருக்கு ஒருமாதகாலச் சிறைத்தண்டனை வழங்கப்படுகிறது. பொலிஸாரின் முன்னிலையில் அந்த ஊடகவியலாளர்களின் வீடியோக் கமராக்களைப் பறித்துச் சென்ற மேர்வின் சில்வாவின் அடியாட்களுக்கு என்னதண்டனை வழங்கப் போகிறீர்கள் என்று ஊடகவியலாளர்கள் தொடர்ந்து கேள்வி எழுப்பினர்.

இது தொடர்பில் நான் சங்கடத்தில் சிக்கியுள்ளேன் என்றார். இவ்வாறான சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார். (சி)



யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையிலான குழுவினரை பலாலியில் வரவேற்கப்பட்டபோது எடுக்கப் பட்ட படம்.

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விலை மாற்றங்கள் இதில் தாக்கத்தை ஏற்படுத்திவதில்லை" என அஜந்தா டிமெல் தெரிவித்துள்ளார். இலங்கை பெற்றோலியக் கூட்டுதாபனம் நாளாந்த மாற்றங்களை அடிப்படையாக வைத்து எரிபொருள்களின் விலைகளை கூட்டவும் முடியாது; குறைக்கவு ம் முடியாது. விலைகளைக் குறைப்பது குறித்து அடுத்த மாதமே சிந்திக்க முடியுமென அவர் தெரிவித்துள்ளார். (அ-சி)

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுவதிகள் காணப்பட்டனர் எனவும் அவர் கூறினார்.

மட்டக்களப்பு கல்லடிக்குக் கொண்டு செல்லப்பட்டு பின்னர் அங்கிருந்து கொழும்பிற்கு கொண்டு வரப்பட்ட வேளை கறுவாத்தோட்டத்திற்கு அருகில் பஸ் சென்று கொண்டிருந்தவேளை, தான் தப்பி வெள்ளவத்தையில் உள்ள உறவினர் வீட்டிற்கு ஓட்டோ ஒன்றில் சென்றார்.

அப்போது வெள்ளவத்தைப் பொலிஸார் அந்த ஓட்டோவைச் சோதனையிட்ட போது குறித்த யுவதியைக் கைதுசெய்தனர் என்றும் கூறப்பட்டது.

குறித்த யுவதி வெள்ளவத்தை பொலிஸில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார். அவர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் மேலதிக விசாரணைக்காக ஒப்படைக்கப் படுவார் என்றும் பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (அ-சி)

## குடாநாட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரல் ஜி.ஏ.சந்திரசிறி உயர்மட்டக் குழுவை வரவேற்று பலாலி படைத்தலைமையகத்துக்கு அழைத்துச் சென்றார்.

இங்கு இடம்பெற்ற உயர்மட்ட மாநாட்டில் யாழ்.மாவட்டத்தின் பாதுகாப்பு, சிவில் நிர்வாகம் ஆகியன தொடர்பாக முக்கிய மாக மேஜர் ஜெனரல் சந்திரசிறி எடுத்துக் கூறினார்.

மாவிட்டபுரம், நல்லூர் ஆலயங்களில் யாத்திரியர்களின் வழிபாட்டுக்கு எவ்வாறு படையினர் உதவுகின்றனர் என்பது குறித்தும் அவர் விளக்கிக் கூறினார்.

கல்வி, சுகாதாரம், உணவு விநியோகம் போன்ற வற்றில் மக்களுக்குவேண்டிய உதவிகளை நல்குவ தாகவும் அவர்கூறினார்.

குடாநாட்டு மக்களின் சிவில் நிர்வாகத்தை சீராக்குவற்கு உரிய நடவடிக்கை மேற்கொள் ளுமாறு கோத்தபாய அறிவுறுத்தினார். (அ-1)

# கைக்குழந்தையுடன் கோவிலுக்கு வந்த பெண் பொலீஸாரிடம் ஒப்படைப்பு

சங்கானை, ஓக 8

சங்கானை செங்கற்படை மகாதேவ பிள்ளையார் ஆலயத்தில் நேற்று இடம் பெற்ற கொடியேற்றத் திருவிழாவின் போது தாலிக்கொடி மற்றும் சங்கிலி திருட்டு முயற்சிகள் முறியடிக்கப்பட்டன.

மேற்படி ஆலய கொடியேற்றத் திருவிழாவுக்கு சன நெரிசலில் பெண் ஒருவரின் 11 பவுண் தாலிக்கொடியும், 4 பவுண் சங்கிலியும் திரு விழா நடைபெற்றுக் கொண்டிருந்தபோது காணாமற் போயின.

கைக்குழந்தையுடன் வந்த பெண் ஒருவர் மீது சந்தேகம் கொண்டு விசாரிக்கப்பட்ட போது தாலிக்கொடி, சங்கிலி என்பன அவரிடம் இருந்து மீட்கப்பட்டன.

மானிப்பாய் பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட பிரஸ்தாப பெண் விசாரணை செய்யப்பட்டு வருகிறார். (அ-1-29)

## ஆவணிமாதத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயர் இல்லத்திற்குக் கொண்டுவரப் பட்டுள்ளது.

நான்கு மாதங்களுக்குப் பின்னர் கடந்த புதன்கிழமை (6ஆம்திகதி) மடு ஆலயத்திற்கு குருமார்கள் சென்றனர். மடு ஆலயத்தின் திருத்தவேலைகள் செய்யப்பட்டுள்ள போதிலும் ஆலயத்தின் உட்கட்டமைப்புப் பணிகள் இன்னும் முடிவடையவில்லை. ஆவணி திருவிழா நடைபெறுவதாக இருந்தால், ஆலயத்திற்கு வரும் பெரும் எண்ணிக்கையான பக்தர்களுக்குத் தேவையான குடிதண்ணீர், மின் வெளிச்சம் மற்றும் அவர்களின் பாதுகாப்பு என்பவற்றுக்கான நடவடிக்கைகள் முழுமை பெற வேண்டியுள்ளன. அதற்கு காலம் போதாத நிலைமையே உள்ளது.

அத்துடன், ஆலயத்திற்கு வரும் எண்ணற்ற பக்தர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கும் வகையில் மடுக்கோவில் பிரதேசத்தை மோதலற்ற புனித பிரதேசமாக்க வேண்டும் என்று மன்னார் ஆயர் மற்றும் நாட்டின் ஆயர்கள் மன்றத்தினரால் விடுக்கப்பட்ட வேண்டுகோள், இராணுவத்தினராலும், விடுதலைப் புலிகளாலும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

ஆகவே, இந்தச் சூழ்நிலையில் மடுமாதாவின் பாரம்பரிய ஆவணி மாதத் திருவிழாவை இம்முறை வழமைபோல நடத்த முடியாதிருக்கிறது எனத் தெரிவித்துக் கொள்ளும் அதேவேளை, எமது நாட்டில் நிரந்தர அமைதி ஏற்படவேண்டும். அதன் மூலம் தற்போது இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் மக்களின் துயரங்கள் நீங்க வேண்டும்- எனவும் மன்னார் ஆயர் மடு நிலைமைகள் குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார். (அ-சி)

## இந்தியக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை இந்தியக்கடற்படையினர் கைது செய்தனர். அவர்களிடமிருந்த இரு படகுகள் மற்றும் 500 கிலோகிராம் நிறையுடை மீன்கள் ஆகியவற்றையும் பறிமுதல் செய்திருக்கின்றனர்.

கைதான மீனவர்களின் பெயர் விபரங்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (சி)

## வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"உண்மையாகவே மடுமாதா தேவஸ்தானத்தின் வருடாந்த உற்சவம் நடத்தப்படுமா? இல்லையா?, மடுமாதா திருச்சொரூபம் மீண்டும் தேவஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்படுமா? அது எக்காலத்தில்? என்பன போன்ற தீர்மானங்களை எடுக்க வேண்டியவர் மன்னார் மேற்றிராணியாரும், மடுமாதா தேவஸ்தானப் பொறுப்பாளருமான வணக்கத்துக்குரிய இராயப்பு ஜோஸப் ஆவார்." - என்று தமது குறிப்பில் சுட்டிக்காட்டியிருக்கிறார் ஜயலத் ஜயவர்த்தனா.

வன்னி மாவட்டத்திற்குட்பட்ட மடுமாதா தேவஸ்தானத்தின் உற்சவம் தொடர்பான கேள்விகளும், குழப்பங்களும் ஒருபுறமிருக்க, தற்போது இடம்பெற்றுக்கொண்டிருக்கின்ற யுத்தத்தினால் மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் அகதிகளாக - அடிப்படை வசதிகளான உணவு, உறையுள், குடிதண்ணீர் எதுவுமின்றிக் காடுகளிலும், கற்குகைகளிலும் வசிக்கும் 60 ஆயிரம் அகதித் தமிழர்களின் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது.

ஆனால், அதைப்பற்றி அரச தரப்பில் யாரும் கண்டுகொள்வதாகவோ, அதற்கான பதிலைத் தருவதாகவோ இல்லை. இந்த அகதிகளில் சிறு குழந்தைகள், வயதானோர், கர்ப்பிணித் தாய்மார்கள் கூட உள்ளடங்குவர். இவர்கள் மரண தண்டனைக்குட்பட்டவர்களின் முகாம்களில் (death camp) தள்ளப்படுள்ளனர் என்பது தான் கவலைக்குரிய விடயமாகும்.

மடு தேவ மாதா எப்போதும் மக்களுக்கு அருள்புரிபவர். விஷேடமாக அம்மாதா அப்பாவியான, யாரின் துணையுமற்ற, அகதிளாக்கப்பட்டவர்களுக்கே தாயாக தமது பாதுகாப்பையும், நிம்மதியையும் வழங்கி வந்துள்ளார். அன்னை மடு மாதா சமாதானத்தின் அரசி... ரோக நிவாரணி... அகதிகளின் சரணாலயம்.

மஹிந்த ராஜபக்ஷவின் அரசு முயற்சிப்பது தெற்கிலுள்ள சிங்கள மக்களுக்கு மடு மாதா தேவஸ்தானத்தின் வருடாந்த உற்சவத்தில் கலந்துகொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்குவதற்கு மட்டுமேயாகும். ஆனால் அகதிகளாகத் துன்புறும் அப்பாவித் தமிழ் மக்களில் எந்த அக்கறையும் காட்டியதாக தெரியவில்லை. அதற்கு முயற்சிப்பதற்கும் யோசிக்கின்றனர் போலும்.

இது எந்த விதத்தில் நியாயம்? ஜனநாயக நாட்டில் ஏன் இந்தப் பாரபட்சம் ? மடு மாதா தேவஸ்தானம்சிங்களமக்களுக்குமட்டுமல்லாது அனைத்து இலங்கைவாழ் மக்களது புனித ஸ்தலமாகும். அது ஒரு புண்ணிய பூமியாகும்.

வன்னியில் இவ்வாறு பல்வேறு கஷ்டங்களுக்கு உட்பட்டு, அடிப்படை வசதிகள் கூட இல்லாது துன்புறும் மக்களின் அவல நிலைமை தெற்கில் பெரும்பான்மையான சிங்கள மக்களுக்கு தெரிய நியாயமில்லை.

தெற்கில் சிங்கள மக்கள் மூன்று வேளையும் நிறைவாக உண்பதற்காக சிரமப்பட்டு தமது உறைவிடங்களில் வசிக்கின்றனர் என்றாலும், வடக்கில் ஒரு வேளைகூட உண்ணவோ, இருக்க உறையுளோ இன்றி அவதியுறும் அப்பாவி மக்களின் இந்த உண்மையான நிலைமை அரச ஊடகங்கள் மூலம் ஏன் மறைக்கப்பட்டு வருகின்றன?

இவ்வாறு ஒருபுறம் மக்கள் துன்புறும் போது, மறுபுறம் மடு அன்னைக்காக நடத்தப்படும் உற்சவத்தையும், ஆராதனைகளையும் அன்னை விருப்போடு ஏற்றுக் கொள்வாரா ? வன்னி மக்கள் எங்கோ ஒரு மூலையில் அகதிகளாக இருக்க தெற்கில் உள்ள மக்களை அழைத்துக்கொண்டு போய் மடுமாதாவிற்கு உற்சவம் நடத்துவது பற்றி இருமுறை சிந்தித்துப் பார்க்கக் கூடிய செயலாகும்.

- இவ்வாறு ஜயலத் எம்.பி.தனது செய்திக்குறிப்பில்மேலும் தெரிவித்திருக்கிறார். (அ-சி)

புதிய பிரிவு ஆரம்பம்
கணக்கீடு
BY: P. பகீரதன்
கட்டுப்பாட்டுக் கணக்கு
Sat, Sun 12-1 p.m
ஆரம்பம் 09.08.2008
(Sat) 12 pm
விக்னா
கல்வி நிறுவனம்
தலைமையகம்-52
ஸ்ரான்லி றோட், யாழ்.

புதிய பிரிவு ஆரம்பம்
கணக்கீடு
Paper Class
BY: P. பகீரதன்
Sat, Sun 10-11 AM
ஆரம்பம் 09.08.2008
(Sat) 10 AM
விக்னா
கல்வி நிறுவனம்
தலைமையகம்-52
ஸ்ரான்லி றோட், யாழ்.

G.M.K communication
யாழில் மிகக்குறைந்த விலையில்
கணனி பாகங்களை பெற்றிடுங்கள்
DVD rom writer (sumsang) - 3700/=
(Dual layer)
processer(1.8 dual core) - 8100/=
Mother board(Foxconn) - 5900/=
Web cam with head set - 4000/=
17"Lcd Moniter (sumsang)-22500/=
Hard disk (160Gb sata) - 5400/=
mouse, Key board, blankcds pen drives & other computer parts
1 year worrenty
மிக குறைந்த விலையில்
computer typing, photo copy, laminating, printing, fax & calls.
G.M.K communication, phone no - 0212223760

புதிய பிரிவுகள் ஆரம்பம்
விடுமுறை காலத்தில் கற்கை நெறிகளை பூர்த்தி செய்யலாம்
Microsoft Office
Desktop Publishing
Web Designing
Visual Bacic, VB.Net
MCS Supported By UNDP/JRRP
விபரங்களிற்கும், பதிவுகளிற்கும் 11-08-2008 முன் நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
(பரமேஸ்வராசந்தி அருகே)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
கணக்கீடு
P.பகீரதன்
A\L கிரயக்கணக்கீடு 2009 Sat., Sun. 3-4pm
ஆரம்பம்:-9.8.08 Sat 3pm
A\L கட்டுப்பாட்டுக்கணக்கு 2009 Sat., Sun. 7 - 8am
ஆரம்பம்:-9.8.08 Sat 7am
A\L நேங்கல் கணக்கு 2009 Sat., Sun. 4 - 5pm
ஆரம்பம்:-9.8.08 Sat 4pm
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

விற்பனையாகிறது
தரம் - 5 புலமைப்பரிசில் 10வினாத்தாள்கள் விடையுடன் - 120/=
03.08.2008- கண்டியில் நடைபெற்ற கருத்தரங்கு தொகுப்பு -II ரூபா 100/=
மெட்டோன்ஸ்ரேர்ஸ் - நெல்லியடி
சிறிகாந்தா புத்தகசாலை- நல்லூர் (முன்வீதி)
அன்னை புத்தகசாலை
ஆஸ்பத்திரி வீதி, யாழ். 222 9881

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.08.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் சுடர் 05

விசேட பரீட்சை வெளியீடு - 05

ஆசிரியர்:-
திரு.எஸ்.தீபன்,
வவுனியா பூந்தோட்டம் மகாவித்தியாலம்.



Model Examination For Grade Five Students for Selection to School and for the Award of Bursaries, August 2008

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம்-05 மாணவர்களுக்கு நடத்தப்படும் புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை, ஓகஸ்ட் 2008

## வினாத்தாள் - I

மாணவர் சுட்டெண்:- ..............................  நேரம்:- 45 நிமிடங்கள்

முதலாம், இரண்டாம் வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்றொடருக்கு மிகப்பொருத்தமான உருவைத் தெரிவுசெய்க.

01. வனவிலங்கு - புல்வெளிகளை விரும்பும் - தாவர உண்ணி.




02. ஊர்வன - நீந்தக்கூடியது - பற்கள் இல்லாதது.




3ஆம், 4ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்ட உருக்களின் தொடர்பை அவதானித்து அடுத்துவரும் உருவின் கீழ்க் கோடிடுக.


03.



04.




05.




இவ் உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?
1) 10  2) 16  3) 18

06. உருவில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை பொருத்தமான மூன்று கட்டங்களாக வகைப்படுத்தினால் மிகவும் சரியான கட்டமைப்பு எது?





7ஆம், 8ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருக்களின் இடைவெளிகளில் வரவேண்டிய மிகப்பொருத்தமான பகுதியின் கீழ்க் கோடிடுக.

07.



08.






9ஆம், 10ஆம் வினாக்களில் உள்ள பழமொழிகள் உணர்த்தும் பொருத்தமான கருத்தைத் தெரிவு செய்க.

09. கிட்டாதாயின் வெட்டென மற
1) செய்கின்ற காரியங்களை உடனே மறக்க வேண்டும்.
2) கிடைக்க இயலாத ஒன்றை உடனே மறந்துவிட வேண்டும்.
3) கிட்ட இருப்பவைகளை உடனே மறந்துவிட வேண்டும்.

10. மனமுண்டால் இடமுண்டு
1) மனம் என்று ஒன்று இருந்தால் கட்டாயம் இதயமும் இருக்கும்.
2) மனம் இருந்தால் விரும்பிய இடங்களுக்கெல்லாம் செல்லமுடியும்.
3) விரும்பினால் யாருக்கும் உதவி செய்யலாம்.

11ஆம், 12ஆம் வினாக்களுக்கு கீழ்வரும் வரிப்படத்தின் துணைகொண்டு விடை காண்க.




11. சிறுவன் X எனும் இடத்தில் இருந்து புறப்பட்டு A வழியாக வீட்டை அடைவதற்கு எத்தனை முறை வலது பக்கமாகத் திரும்பியுள்ளான்?
1) 1  2) 3  3) 2


12. சிறுவன் X எனும் இடத்தில் இருந்து புறப்பட்டு A வழியாக வீட்டை அடைந்து B வழியாக திரும்பவும் ஆரம்பித்த இடத்தை அடைவதற்கு எடுக்கும் தூரம் யாது?
1) 765m  2) 750m  3) 800m

13. தரப்பட்ட கோலத்தை அவதானித்து வெற்றுக் கூட்டில் வரவேண்டிய எண்ணை எழுதுக.


583 → 358 → 835 → ..........

14ஆம், 15ஆம் வினாக்களில் வெற்றுக்கூடுகளுள் வரவேண்டிய எண்ணை எழுதுக.

14.




15.





நிசாந்தின் வயதின் 5 மடங்கு அப்பாவின் வயதாகவும், 4 மடங்கு அம்மாவின் வயதாகவும் இருந்தது. மூவரது வயதுகளின் கூட்டுத்தொகை 60 வயதுகள் ஆகும்.

16. நிசாந்தின் தாயாரின் வயது யாது?
1) 30  2) 24  3) 20

17. நிசாந்தின் வயது 10 ஆக இருக்கும்போது தந்தையின் வயது யாது?
1) 30  2) 32  3) 34

தரப்பட்ட வென்வெரிப்படத்தை அவதானித்து 18ஆம், 19ஆம் வினாக்களுக்கு விடை தருக.




18. கணிதத்தையும் தமிழையும் விரும்புவோரின் எண்ணிக்கை யாது?
1) 16  2) 9  3) 23

19. மூன்று பாடங்களையும் விரும்புவோரின் எண்ணிக்கை யாது?
1) 9  2) 19  3) 7


20. ஆங்கிலத்தையும் கணிதத்தையும் மட்டும் விரும்புவோரின் எண்ணிக்கை யாது?
1) 13  2) 10  3) 17

கபிலனின் சகோதரி தனக்கு மூன்று ஆண் சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் இருக்கின்றனர் எனக் கூறினாள்.

21. கபிலனின் சகோதரிகளின் எண்ணிக்கை யாது?
1) 2  2) 3  3) 4

22. கபிலனின் குடும்ப ஆண் சகோதரர்களினதும், சகோதரிகளினதும் எண்ணிக்கை யாது?
1) 5  2) 7  3) 6

23.




24. தாவரம், இருவித்திலைத்தாவரம், பலாமரம் என்பவற்றிற்கிடையிலான தொடர்பை சரியாகக் காட்டும் உரு எது?





25. 15m நீளமும் 8m உயரமும் உடைய சுவருக்கு வர்ணப்பூச்சு பூசுவதற்கு 2$l$ பூச்சு தேவை எனின், 30 m நீளமும் 11m உயரமும் கொண்ட சுவருக்கு வர்ணம் பூசத் தேவையான பூச்சின் அளவு யாது?
1) 5.5 $l$  2) 5 $l$  3) 4.5 $l$



தயாபரனின் மனைவி சகுந்தலா, மகன் திசோக், தயாபரனின் தந்தை கந்தசாமி, தாய் விசாலாட்சி, திசோக்கும் லக்சினியும் சகோதரர்கள் ஆவர். திசோக்கின் சித்தப்பா கபிலன், தயாபரனின் சகோதரி பவித்திரா.

இவ்வரிப்படத்தை அவதானித்து 28 - 30 வரையான வினாக்களுக்கு விடை தருக.





26. தயாபரனின் பெற்றோரைக் குறிக்கும் எழுத்துக்கள் எவை?
1) M, P  2) F, H  3) P, B

27. B இற்கும் R இற்கும் இடையிலான உறவு முறை யாது?
1) தாய் - மகள்  2) தாய் - மகன்  3) மாமி - மருமகள்

28. R இற்கும் M இற்கும் இடையிலான உறவு முறை யாது?
1) மாமி - மருமகள்  2) மாமி - மருமகன்  3) தாய் - மகள்


கீழே சில மரக்குற்றிகள் ஒன்றோடொன்று ஒட்டியிருக்கும் வகையிலமைந்து காணப்படுகின்றன.




29. இவ் உருவை A யில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் யாது?





30. இவ் உருவை B யில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் யாது?




31. நான் வழமையாக வெள்ளிக்கிழமைகளில் கோயில் செல்வேன். கோயில் செல்வதற்கு முதல் நாள் என்னைக் கண்ட மிதுசன் "நாளை மறுதினம் உன் வீட்டுக்கு வருவேன்" எனக் கூறினான். எனின், மிதுசன் எனது வீட்டுக்கு வரும் தினம் யாது?
1) ஞாயிறு  2) திங்கள்  3) சனி

32. வகுப்பு ஒன்றில் ரமேஸ் நிசாரை விட கூடிய புள்ளிகளையும், கபீரைவிட குறைவான புள்ளிகளையும் பெற்றான். கரன ரமேசை விட கூடிய புள்ளிகளைப் பெற்றபோதும் அவனால் முதலிடத்துக்கு வரமுடியவில்லை எனின், முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றவர்கள் யாவர்?
1) கபீர் - ரமேஸ்  2) கரன் - ரமேஸ்  3) ரமேஸ் - கரன்

33. சதுர வடிவான கடதாசியை நான்காக மடித்து வெட்டியபின் அதைத் திரும்பவும் விரித்தால் அதன் சரியான தோற்றத்தைக் காட்டும் உரு எது?





34ஆம், 35ஆம் வினாக்களில் மூன்று கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன, அவற்றுள் சரியான கூற்றைத் தெரிந்து இலக்கத்தை அருகில் உள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.

34. 1) கபிலனுக்கு சகோதர சகோதரிகள் மூவர் உள்ளனர். கபிலனின் அண்ணாவிற்கு 3 சகோதரிகள் உள்ளனர்.
2) போட்டி ஒன்றில் மூவர் பங்குபற்றினர். அதில் மூன்றாமிடத்தை இருவர் பெற்றனர்.
3) ரவி 75 ரூபா பெறுமதியான பொருட்களை வாங்கிய பின் 100 ரூபா கொடுத்தார். மீதியாக அவர் பெறும் தொகை கொடுத்த பணத்தின் 1/4 பங்காகும். ( ...................... )

35. தாரணி "சிலவேளை நான் நாளை பாடசாலை வரமாட்டேன்" எனக் கூறினாள். எனின்,
1) நாளை மட்டும் தாரணி பாடசாலை வரமாட்டாள்.
2) தாரணி பெரும்பாலும் நாளை பாடசாலை வருவாள்.
3) நாளை கட்டாயம் தாரணி பாடசாலை வரமாட்டாள். ( ...................... )

36. பின்வரும் எண்கோலத்தை அவதானித்து அடுத்து வரும் எண்ணை புள்ளிக் கோட்டில் எழுதுக.
1, 2, 5, 10, ..........................

37ஆம், 38ஆம் வினாக்களுக்கு பின்வரும் தரவை அடிப்படையாகக் கொண்டு விடை தருக.




37. ஒரு அன்னாசிப் பழத்தின் விலை யாது?
1) 20  2) 35  3) 30

38. இரண்டு அப்பிளின் விலை யாது?
1) 70  2) 50  3) 40

39ஆம், 40ஆம் வினாக்களுக்கு பாடலை வாசித்து விடை எழுதுக?

பாலும் எனக்குத் தேவையில்லை
பழமும் எனக்குத் தேவையில்லை
சோலை எங்கும் கூவி நிதம்
சுற்றித் திரிதல் போதுமப்பா

39. இப்பாடல் எதனை வேண்டி பாடப்பட்டுள்ளது?
1) உணவு  2) சுற்றுலா  3) விடுதலை

40. இப்பாடலில் எங்கு எல்லாம் தினமும் சுற்றித் திரிய வேண்டும் எனக் கூறப்படுகிறது?
1) வானம்  2) சோலை  3) பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாத்தாள் - II

மாணவர் சுட்டெண்:- .............................. நேரம்:- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

01. கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசிக்குக.

எண்ணிய முடிதல் வேண்டும்,
நல்லவே எண்ணல் வேண்டும்,
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்
பண்ணிய பாவமெல்லாம்
பரிதி முன் பனியே போல
நண்ணிய நின்முன் இங்கு
நசித்திடல் வேண்டும் அன்னாய்!

பாடல் அடிகளைக்கொண்டு 1-10 வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

01) இப்பாடலில் எதற்காக வேண்டுதல் இடம்பெறுகிறது? ..............................

பின்வருவனவற்றின் ஒத்த சொற்களை எழுதுக.

02) திண்ணிய - .............................. 03) பரிதி - ..............................

பின்வருவனவற்றின் எதிர்ச்சொற்களை எழுதுக.

04) முடிதல் - .............................. 05) தெளிந்த - ..............................

06) "நல்லறிவு" என்பதைப் பிரித்தெழுதுக. ..............................
07) "நின் முன்" என்பதன் கருத்து யாது? ..............................
08) "பனியே" என்பதை பன்மையில் எழுதுக? ..............................
09) பாடலில் உள்ள உவமைத் தொடரை எழுதுக? ..............................
10) பாடலில் உள்ள பெண்பால் பெயர்ச் சொல்லை எழுதுக? ..............................

02. பின்வரும் சொற்களைப் பொருத்தமாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.
1) நல்ல / அவரை / கொண்டு / ஒருவரின் / மட்டிடலாம் / ஒரு / பண்பைக்
2) தாய் / கிடந்தாள் / கம்பலையுமாகக் / பிரிந்த / கண்ணீரும் / குழந்தையைப்

03. பின்வரும் பழமொழிகளின் கருத்துகளை எழுதுக.
1) வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் ..............................
2) ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது ..............................

04. வெற்றிடத்திற்குப் பொருத்தமான எழுத்துப்பிழையற்ற சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்து எழுதுக.
1) புதியவை ..............................யாக மாறுவது நியதியாகும். (பழையவை/பளையவை/பலையவை)
2) சூரியனின் பொற்கதிர்கள் .............................. விழுந்தன. (நிளத்தில்/நிழத்தில்/நிலத்தில்)
3) கோழிக் குஞ்சுகள் வானத்தை .............................. பார்த்தன. (அன்னாந்து/அண்ணாந்து/அன்ணாந்து)

05. பின்வரும் உருக்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை எழுதுக.





1) .............................. 2) .............................. 3) ..............................

06. பின்வரும் ஆங்கில வாக்கியத்திற்குரிய தமிழ்க் கருத்தை எழுதுக.
1) Could you please help me? : ..............................
2) Form a line : ..............................
3) Where do you live? : ..............................

07. பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைத் தமிழில் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.



ஓபகே நம மொக்கத?

..............................

மகே நம பிரியந்த.

..............................



08 - 29 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப்பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

08. பின்வருவனவற்றுள் எண்ணெய் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படாத வித்து எது?
1) எள். 2) சணல். 3) இலுப்பை. 4) வேம்பு.

09. பின்வரும் வித்துக்களில் எந்த வித்தில் சிவப்பு, கறுப்பு ஆகிய நிறங்கள் சேர்ந்து காணப்படும்?
1) இப்பிலிப்பில். 2) மஞ்சாடி. 3) குன்றுமணி. 4) இலந்தை.

10. பின்வருவனவற்றுள் முள்ளந்தண்டுடைய பிராணி எது?
1) பல்லி. 2) நுளம்பு. 3) நண்டு. 4) நத்தை.

11. பொருட்களுக்கு விளம்பரம் செய்யப்படுவதன் நோக்கம் அல்லாதது எது?
1) புதிய பொருட்களை அறிமுகம் செய்தல். 2) பொருளின் பாவனையை மக்களுக்கு தெரியப்படுத்தல்
3) பொருட்களின் நுகர்வை குறைத்தல். 4) பொருட்களின் விற்பனையை அதிகரித்தல்.

12. தெற்காசிய அமைப்பில் (SAARC) அங்கத்துவம் உடைய நாடுகள் எத்தனை?
1) 07 2) 08 3) 09 4) 06

13. யாழ்ப்பாணத்தை ஆண்ட கடைசித் தமிழ் மன்னன் யார்?
1) சங்கிலியன். 2) எல்லாளன். 3) பண்டாரவன்னியன். 4) இராஜசிங்கன்.



14. மின்னேரியா குளத்தை கட்டுவித்த மன்னன் யார்?
1) தாதுசேனன். 2) மகாசேனன். 3) பராக்கிரமபாகு. 4) வசபன்.

15. தீப்பிடித்து எரியும் ஒருவரை பாதுகாக்கும் முறை அல்லாதது எது?
1) அவரை உடனே நிலத்தில் உருள விடல். 2) அவரின் மேல் ஈரச் சாக்கைப் போடுதல்.
3) அவரின் மேல் மணல் மண் போடுதல். 4) காற்றோட்டமான இடத்தில் அவரை உலாவவிடல்.

16.

இவ் வீதி சமிக்ஞை குறிப்பது,
1) இவ்வீதியால் வாகனங்கள் ஒன்றையொன்று முந்திச்செல்லத் தடை.
2) இத்திசையில் வாகனம் செல்லத் தடை.
3) வாகனங்களை நிறுத்திவைக்கவோ, தாமதிக்கவோ, தரிக்கவோ கூடாது.
4) கட்டாயச் சுற்றுவட்டம்.

17. மின்குமிழில் நிரப்பப்பட்டிருக்கும் வாயு எது?
1) ஒட்சிசன். 2) ஆகன். 3) காபனீரொட்சைட். 4) நைதரசன்.

18.

இவ் உருவின்படி தோன்றும் விம்பங்கள் எத்தனை?
1) 3
2) 1
3) 2
4) எண்ணற்றவை.

19. சூரியனில் இருந்து மூன்றாவதாக அமைந்துள்ள கோள் எது?
1) புவி. 2) செவ்வாய். 3) வியாழன். 4) வெள்ளி.

20. ஒரு நாட்டின் தேசிய கீதத்தின் நோக்கம் அல்லாதது எது?
1) ஒரு நாட்டின் தேசிய ஒற்றுமையை வளர்த்தல். 2) ஒரு நாட்டின் நாட்டுப்பற்றை வளர்த்தல்.
3) ஒரு நாட்டின் தேசிய வருமானத்தை அதிகரிக்கச் செய்தல். 4) ஒரு நாட்டின் நன்மதிப்பை அதிகரிக்கச் செய்தல்.

21. இலங்கையில் சிங்கராஜ வனம் அமைந்துள்ள மாகாணம் எது?
1) மத்திய மாகாணம். 2) தென் மாகாணம். 3) ஊவா மாகாணம். 4) சப்ரகமுவ மாகாணம்.

22. கம்மாலையினை வேலைத் தளமாகக் கொண்டிருப்போர் யார்?
1) தச்சுவேலை செய்வோர். 2) நகை வேலை செய்வோர்.
3) இரும்புத் தொழில் செய்வோர். 4) மேசன் வேலை செய்வோர்.

23. அருகிலுள்ள உரு குறிப்பது,
1) சிங்கம். 2) விருட்சிகம்.
3) கலப்பை. 4) மிதுனம்.



24. ஒரு சாதாரண கடிதத்தின் ஆகக்கூடிய நிறை யாது?
1) 25g 2) 30g 3) 45g 4) 50g

25. பின்வருவனவற்றுள் காந்தத்தால் கவரப்படாத உலோகம் எது?
1) நிக்கல் 2) இரும்பு 3) குரோமியம் 4) அலுமினியம்

26. பின்வரும் மூலிகைத் தாவரங்களில் தடிப்பான இலையைக்கொண்ட தாவரம் எது?
1) துளசி 2) குறிஞ்சா 3) குப்பைமேனி 4) பசளி

27. நெல் அறுவடையின்போது உள்ளீடுகள் அற்ற நெல்லை எவ்வாறு அழைப்பர்?
1) உமி 2) சப்பி 3) கோது 4) அரிசி

28. கறையானால் அதிகளவில் சேதமாக்கப்படும் மரம் எது?
1) மா 2) வேம்பு 3) முதிரை 4) தேக்கு

29. கப்பல்கள், விமானங்கள் என்பவற்றில் வரும் பயணிகளையும் பொருட்களையும் பரீட்சிக்கும் திணைக்களம் எது?
1) பொலிஸ் திணைக்களம் 2) சுங்கத்திணைக்களம்
3) ஆட்பதிவுத் திணைக்களம் 4) குடிவரவு, குடியகல்வு திணைக்களம்

கீழே தரப்பட்டுள்ள தாவரங்களின் பெயர்களை எழுதுக.






30. .............................. 31. .............................. 32. .............................. 33. ..............................


பின்வரும் விளையாட்டுக்களில் ஒரு குழுவிலுள்ள வீரர்களின் எண்ணிக்கையை எழுதுக.






34. .............................. 35. .............................. 36. .............................. 37. ..............................

38.




வரிப்படத்தில் உள்ள பென்சிலின் நீளம் யாது?

..............................




39. நோயாளி ஒருவர் ஒருவேளை 3 மாத்திரைகள் வீதம் தினமும் மூன்று வேளை உட்கொள்ள 72 மாத்திரைகளை வைத்திருந்தார். எனின், அம்மாத்திரைகள் எத்தனை நாட்களுக்குப் போதுமானதாகும்? ..............................

40.




இவ் உருவின் சுற்றளவு யாது?

..............................




41. அருகில் தரப்பட்டுள்ள இரண்டு புள்ளிகளுக்கு இடைப்பட்ட தூரம் 2cm எனின், இவ் உருவின் பரப்பளவு யாது? ..............................

42. 2l 800ml அளவு உடைய குளிர்பானத்தை எத்தனை 175ml அளவுடைய சிறிய போத்தல்களில் ஊற்றலாம்?

..............................

43.




இவ் உருவில் 0.25 என்பதை நிழற்றிக்காட்டுக.

..............................

44. டினேஸ் தான் பயணம் செய்த 60km இல் 2/5 பங்கை நடந்தும், மீதித் தூரத்தினை புகையிரதத்திலும் பயணம் செய்தான். எனின், அவன் நடந்து சென்ற தூரத்தை விடக் கூடுதலாக எத்தனை km தூரம் புகையிரதத்தில் பயணம் செய்தான்?

..............................


45. கடிகாரம் A காட்டும் நேரத்திற்கு 1.15 நிமிடங்கள் முன்னதாக உள்ள நேரத்தைக் கடிகாரம் B யில் குறித்துக் காட்டுக.




46. 150g சீனியின் விலை ரூபா 12 உம், 600g பருப்பின் விலை ரூபா 66உம் எனின், 1 1/2 kg சீனியையும் 1 1/4 kg பருப்பையும் வாங்கும்போது கொடுக்கவேண்டிய மொத்தப்பணம் யாது? ..............................


47. அருகிலுள்ள கோட்டுப்படத்தில் சில நகரங்களுக்கிடையிலான தூரம் ஆங்கில எழுத்துக்களில் தரப்பட்டுள்ளது. இதன்படி A யில் இருந்து D வரை உள்ள தூரம் யாது?

..............................




48. ஒரு பாடசாலைக்கு குறித்த ஒரு நாளில் மாணவர்கள் பயணம் செய்துவந்த வாகனங்கள் தொடர்பான விவரம் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| வாகனம் | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|
| கார் | 48 | 53 |
| பேருந்து | 86 | 115 |
| முச்சக்கரவண்டி | 52 | 41 |
| துவிச்சக்கர வண்டி | 74 | 36 |




1) பாடசாலைக்கு துவிச்சக்கரவண்டியில் வந்த மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது? ..............................
2) பாடசாலைக்கு வாகனங்களில் வந்த ஆண்களது எண்ணிக்கைக்கும் பெண்களது எண்ணிக்கைக்கும் இடையிலான வித்தியாசம் யாது? ..............................
3) பேருந்தில் வந்த மாணவர்கள் ஒவ்வொருவரும் ஒருவழிப் பேருந்துக்கட்டணமாக 7/- செலுத்தினர் எனின், பேருந்தில வருகைதந்த மாணவர்களின் ஒருவழி மொத்த பேருந்துக் கட்டணம் யாது? ..............................
4) ஒரு முச்சக்கர வண்டியில் சராசரியாக 5 மாணவர் மட்டுமே பயணம்செய்ய முடியும் எனின், ஆண் மாணவர்கள் பாடசாலை வருவதற்கு தேவையான முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கை யாது? ..............................
5) பாடசாலைக்கு வாகனங்களில் வந்த ஆண்களது எண்ணிக்கையினை நிரல் வரைபில் காட்டுக.

ஒரு மாலைவேளை நானும் என் தம்பியும் வயல்வெளிக்குச் சென்றிருந்தோம். அங்கு நின்ற சில சிறுவர்கள் அழகான பட்டம் ஒன்றை வானத்தில் பறக்கவிட்டு குதூகலித்துக்கொண்டிருந்தார்கள். திடீரென பலத்தகாற்று வீசவே பட்டம் அங்குமிங்குமாகத் தடுமாறியது. சிறுவர்கள் செய்வதறியாது.............

இச்சம்பவத்தைத் தொடர்ந்து உமது வசனநடையில் ஆறு வாக்கியங்கள் எழுதுக. வாக்கியங்கள் ஒவ்வொன்றும் திருத்தமான எழுவாய், பயனிலைத் தொடர்புடையனவாகவும் அத்துடன் நான்கு சொற்களுக்குக் குறையாமலும இருத்தல்வேண்டும்.

49. ..............................
50. ..............................
51. ..............................
52. ..............................
53. ..............................
54. ..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org